# அச்சாரம்
# ACCHARAM

பல்சுவை மாத இதழ்
Tamil Monthly

மலர் -9 | இதழ் -12 | ஜூலை 2025 | விலை ரூ.15/-
Volume - 9 | Issue - 12 | July 2025 | Price Rs.15/-




ROCK & ROLE PRODUCTION
WHITE HORSE FILM PRODUCTION
'அன்பின் அரசன்' சுந்தர் மஹாஸ்ரீ மேற்பார்வையில்
தருண்
வெங்கட்
கார்த்திக்
WRITTEN & DIRECTION VENKAT MUNIRATHINAM
STORY VENKAT MUNIRATHINAM, SUNDAR MAHASRI, A.C.MANIKANDAN
MUSIC JOSEPH CHANDRASEKAR - S.SATHISH KUMAR
LYRICS PAVITHRA VENKATRAMAN - SATHISH KUMAR - JOSEPH CHANDRASEKAR
SINGER PAVITHRA VENKATRAMAN - SATHISH KUMAR, SARANYA CINEMATOGRAPHY SUNDAR MAHASRI - VENKAT MUNIRATHINAM
ASSISTANT DOP KARTHIK, SAKTHI JOTHIMANI EDITING SUNDAR MAHASRI - A.C.MANIKANDAN
ASSISTANT EDITOR RANJITH KUMAR RK ART MANI"CHITHAPPA" - VICKY SOUND DESIGNER S.SATHISH KUMAR
CHOREOGRAPHER RAJKUMAR MARIYADOSS - RAGUL UNNIKRISHNAN - MADHAVAN - SARAVANAN
LOCATION MANAGER ARUL SELVAM - AYYAPPAN ASSISTANT DIRECTOR VARUN - THIRU - GOPI - YUVARAJA - SANTHANAM
ASSOCIATE DIRECTOR AMIRTHA VARSHINI CO - DIRECTOR K S VIMAL SUBRAMANI PRODUCTION MANAGER VIJAY RAGHAVAN
MAKEUP TEAM KAYAL AKKA - LOGESWARI SELVAKUMAR - TAMIL SELVAN DI COLOURING A.C.MANIKANDAN
STILLS SAKTHI JOTHIMANI - MITHUN STUDIO SG STUDIO KARTHIKEYAN DISTRIBUTION W&D SRINATH RITE
EXECUTIVE PRODUCER SUNDAR MAHASRI CO PRODUCTION SELF MADE PICTURES PUBLICITY DESIGNS SELVAA
PRODUCED BY YASMEEN BEGAM - P.BHOOPATHY
TAMIL THAI CREATIONS

# ஆசிரியர் பக்கம்


# அச்சாரம்

மலர் - 09 இதழ் -12 ஜூலை 2025

வெளியீட்டாளர் - ஆசிரியர்
**M.C.சேகர் B.E.,**

இணை ஆசிரியர்கள்
**P.ரஞ்சித்குமார், பாலகுமார்சோமு, ,**
**சே.உமா,**

துணை ஆசிரியர்கள்
T.மதுராஜ், A. NANDAN
R.சரண்குமார் B.E., A.E.SELVAM
A.K.MUTHU,

கௌரவ ஆசிரியர்
M.SIVAKUMAR

பொறுப்பாசிரியர்
M.திரவியப்பாண்டியன் M.A., L.L.B.,

சிறப்பாசிரியர்
R.K அன்பழகன்,
T.அன்பழகன்,

முதன்மை நிருபர் - ஆலோசகர்
பாப்பனப்பட்டு வ.முருகன்

நிருபர்கள்
A.சரவணன்
B.P.முன்னா

புகைப்படக் கலைஞர்
K.சுரேஷ் B.Tech.,

சட்ட ஆலோசகர்கள்
K.செந்தூரபாண்டி B.Sc.,B.L.,
C.காசிவிஸ்வநாதன் B.Sc., B.L.,
P.பாலசுப்பிரமணியம் B.A., B.L.,

வடிவமைப்பு:
4 மீடியா டிசைன்ஸ் @ 7871696917

SF1, 2nd Floor, 5/10, Anna Colony,
Virugambakkam, Chennai - 600 092.
**Cell: 9444153340**
E-mail: accharam2016@gmail.com




**அனைத்து வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விளம்பரம் கொடுத்து உதவிக்கொண்டு வருபவர்களுக்கும் முதல் வணக்கம். ஜூலை 1ல் வெளிவரும் அச்சாரம் 9ஆம் ஆண்டின் 12 ஆம் இதழை உங்கள் ஆதரவோடு தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். எனது வேண்டுகோளுக்கு இணங்க வாசகர்கள் சந்தாவை செக்காக அனுப்பியது மட்டுமில்லாமல் சந்தா தொகையினை வங்கியிலும் கட்டி ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**தொடர்ந்து உங்கள் ஆதரவை நல்கும்...**

**M.C.சேகர் B.E.,** *ஆசிரியர்*
*செல்:* **9444153340**

# இராசுக்குட்டி பதில்கள்

**ஆழமாக சிந்திக்க உதவும், அறிவுரை ஒன்று கூறுங்கள்...**

- வி.திருமுகில், உளுந்தூர்பேட்டை

வாழ்க்கையைச் சற்று தனித்து வாழப் பழகிக் கொள்ளுங்கள். ஏனெனில், நம்முடன் இருப்பவர் என்று நினைப்பவர், எப்போது காற்றில் மறைந்து போவார் என்பது தெரியாது. தனிமையைத் தழுவுவது, நம்மை மனதளவில் வலிமையாக்கும்.

அனைவரும் நம் முன்னால் நடந்து கொள்வது போல, நம் முதுகுக்குப் பின்னால் இருப்பதில்லை. மனிதர்களின் உண்மையான முகத்தை உணர்ந்து கொள்ள, அவர்களின் செயல்களை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

சர்க்கரை போல இனிமையாகப் பேசுபவர்கள், ஒரு நாள் பாகற்காய் போல கசப்பை உணர்த்தும் ஆற்றல் கொண்டவர்களாக மாறலாம். எனவே, வார்த்தைகளை மட்டும் நம்பாமல், செயல்களை அளவுகோலாகக் கொள்ளுங்கள்.

நமக்கான நேரத்தையும், எதிர்காலத் திட்டங்களையும், நாமே சேமித்து வைக்க வேண்டும். நம்மைத் தவிர வேறு யாராலும் நமக்காக அதைச் சிறப்பாகச் செய்ய இயலாது.

தன்னம்பிக்கையுடன் முன்னேறுவது, வாழ்க்கையின் முதல் படியாகும். அதிகமான நட்பு வட்டாரங்கள், சில சமயங்களில் நம்மை வாட்டி விடும். உண்மையான நட்பைத் தேர்ந்தெடுத்து, புரிதலுடன் பயணிக்க வேண்டும்.

வாழ்க்கையில் மகிழ்ச்சி ஒரு பகுதியாக இருப்பது போலவே, இன்னல்களும் துயரங்களும் அதன் அங்கமே.

வாழ்க்கையின் வடிவம் ஒரு வட்டம்ளூ மகிழ்ச்சியும் துன்பமும் மாறி மாறி வரும். நாம் நாமாகவே இருக்க வேண்டும். பிறரைப் போல மாற முயன்றால், உலகம் நம்மை மிதித்து அடக்கிவிடும்.

தனித்துவத்தைப் பேணுவது, நம்மை உயர்த்தும். “என்னிடம் எல்லாம் உள்ளது“ எனப் பெருமை பேசுவது முட்டாள்தனம். இன்று உங்களுடையதாக இருப்பது, நாளை வேறொருவருடையதாக மாறலாம். பணிவும் எளிமையும் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கும்.

பிறரைச் சார்ந்து வாழ்ந்தால், நாம் நம்மை இழந்து விடுவோம்.

தன்னம்பிக்கையுடன், சுதந்திரமாக வாழ பழகுங்கள்.



எந்தவொரு செயலுக்கும் அடிமையாகக் கூடாது. அடிமைத்தனம் நம்மைச் சிறைப்படுத்தும். சுதந்திரமான மனதுடன் வாழ்வதே உண்மையான வெற்றி.

**ரசித்துப் படித்துச் சிரிக்கும் படி, ஒரு நகைச்சுவை உரையாடலை வழங்க முடியுமா?**

- ஆ.மகிழினி, சிதம்பரம்

நோயாளி: டாக்டர், காது வலிக்கு கொடுத்த மாத்திரை பெருசா இருக்கே... இது உள்ளே போகுமா?

டாக்டர்: மாத்திரையை வாயில போட்டு தண்ணீர் குடிச்சா உள்ளே போயிரும்.

நோயாளி: சின்ன வயசுல என் காதுல தண்ணீர் போனதுக்கு ஒரு மாசம் காது கேக்காம இருந்துச்சு, சார். அதான் தண்ணீர் விட யோசிக்கறேன். மாத்திரையை பொடி பண்ணி வாயில போட்டுக்கவா?

டாக்டர்: எம்மா, அந்த மாத்திரையை வாய் வழியா முழுங்கணும், பொடி பண்ண வேண்டாம்.

நோயாளி: ஆனா, சார், என் வாய் நல்லாதானே இருக்கு?

டாக்டர்: வாயில போட்டு தண்ணீர் குடிச்சா, மருந்து காது பிரச்சனைக்கு வேலை செய்யும்.

நோயாளி: காதுல பஞ்சு வெச்சு அடைக்கணுமா, சார்?

டாக்டர்: எதுக்கு மா?

நோயாளி: வாயில போட்ட மாத்திரை காது வழியா வெளியே வந்துடாம இருக்க...

டாக்டர்: எம்மா, நீ எப்பவுமே இப்படித்தானா?

நோயாளி: இல்ல, சார். மருந்து எடுக்கும் போது மட்டும் பஞ்சு வெச்சுப்பேன்.

டாக்டர்: சரி, எதையாவது வெச்சுக்கோ, மா. இப்போ கிளம்பு.

நோயாளி: டாக்டர், சாப்பாடு எப்படி சாப்பிடணும், சார்?

டாக்டர்: வாயாலதான், மா.

நோயாளி: அது காதுக்கு போகாது, இல்லையா, சார்?

டாக்டர்: எம்மா, வாயில சாப்பிடறது எல்லாம் வயிற்றுக்குத்தான் போகும்.

நோயாளி: அப்போ மாத்திரை காதுக்கு போகாதா, சார்?

டாக்டர்: (மறுபடியும் முதல்ல இருந்தா...) போகும், மா. நீ இப்போ கிளம்பலன்னா, எனக்கு பேதி வந்து, பிறகு உயிரே போயிரும்!

நோயாளி: அப்போ நீங்க செத்துட்டா, வேற எந்த டாக்டர் கிட்ட காதுக்கு மருந்து வாங்கணும், சார்?

## படித்ததில் மனதை கனக்க வைத்தது ஏதாவது இருக்கிறதா?

- வீ.கோகுலன், திருவண்ணாமலை

மன்னிக்கத் தெரியாதவள், மறுபடி மறுபடி மண்டியிட்டிருப்பாள். அன்பின் நிமித்தம் உங்கள் வாசலில் மௌனமாகச் சுமைகளைச் சுமந்து நின்றிருப்பாள்.

நீங்கள் பேசிய வக்கிரமான வார்த்தைகள், அவளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்றிருக்கும். ஒவ்வொரு வார்த்தையும் அவள் இதயத்தில் கீறல்களை ஏற்படுத்தியிருக்கும்.

அவள் உங்களுக்காகவே வாழ்ந்திருப்பாள். உங்கள் புன்னகைக்காக, உங்கள் வாழ்வுக்காக, உங்கள் உணவுக்காக, உங்கள் இருப்புக்காக. தன் உறக்கங்களைத் தொலைத்து, உங்களை உயர்த்துவதற்காக அவள் தன்னையே இழந்திருப்பாள்.

அவள் தன் சுமைகளை மறைத்து, உங்கள் முன் புன்னகையை மட்டுமே காட்டியிருப்பாள். நீங்கள் அவள் இதயத்தில் விட்ட காயங்களிலிருந்து இரத்தம் பீறிட்டு வந்தபோதும், அவள் மௌனமாகவே இருந்திருப்பாள்.

உங்கள் பார்வைகளில் அவள் சொரணையற்றவளாகவோ, பைத்தியக்காரியாகவோ தோன்றியிருப்பாள். ஆனால், அவள் உங்களுக்காகவே அனைத்தையும் தாங்கியிருப்பாள்.

ஒரு நாள், அந்த வலிகளின் உச்சத்தில், நிராகரிப்பின் உச்சத்தில், அவமானங்களின் உச்சத்தில், அருவருப்பின் உச்சத்தில், அவள் நிமிர்ந்து நடக்க ஆரம்பித்திருப்பாள்.

அவள் மனதில் மன்னிப்பு இல்லைளூ அதனால்தான் அவள் கடைசி நொடி வரை மண்டியிட்டிருந்தாள்.

நீங்கள் ஒரு கணம் யோசித்திருக்கலாம். அவள் உங்களுக்காகச் சிந்திய கண்ணீரை, அவளும் ஒரு மனுஷியென உணர்ந்து, கொஞ்சமேனும் சிந்தித்திருக்கலாம். ஆனால், இனி அவள் திரும்பி வரப்போவதில்லை.

மன்னிக்கத் தெரியாதவள், அன்பின் கடைசிப் பிடியில் ஒரு நூலைப் பற்றி, நீங்கள் அதைப் பிடித்துக் கொள்வீர்கள் எனக் காத்திருந்தாள். ஆனால், நீங்கள் அதை உணரவில்லை.

இனி அவள் வரப்போவதில்லை, அதே அவளாக. நீங்களே அவளைக் கொன்றுவிட்டு, இப்போது யாரைத் தேடி சத்தமிடுகிறீர்கள்? அவளைப் புதைத்த இடத்தில் நீங்கள் கண்ணீர் விட்டு கதறினாலும், அவள் திரும்பப்போவதில்லை.

## இன்றும் தங்களால் மறக்க முடியாதது எது?

- எச்.சண்முகசுந்தரம், சேலம்

இளையராஜாவைப் பிரிந்த போது, வைரமுத்து எழுதியது...

“இசை ஞானியே! உன்னோடு சேர்ந்துதான் வெற்றி பெற முடியும் என்ற நிலையில் நானில்லை. என்னோடு சேர்ந்துதான் வெற்றி பெற முடியும் என்ற நிலையில் நீயுமில்லை. நம் வெற்றிகள் ஒருவரையொருவர் சார்ந்தவை அல்லளூ ஆனாலும், நம் பயணம் ஒன்றித்திருந்தது.

என் இலக்கிய வாழ்க்கையின் இரண்டாம் பாகத்தைத் தொடங்கி வைத்தவனே! என்னைத் தூக்கி நிறுத்தியவனே! உன்னை நினைக்கும் போதெல்லாம் என் மனதின் ஈரமான பக்கங்கள் படபடக்கின்றன. உன் நினைவுகள் என்னை என்றும் உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன.

கொட்டையை எறிந்துவிட்டு, பேரீச்சம் பழத்தின் இனிப்பை மட்டும் சுவைக்கும் குழந்தையைப் போல, உன்னைப் பற்றிய இனிய நினைவுகளுக்கு மட்டுமே என் இதயத்தில் இடமுண்டு. மனைவியின் பிரிவுக்குப் பின் அவள் புடவையைத் தலைக்கு வைத்து உறங்கும் கணவனைப் போல, உன் நினைவுகளுடன் நான் அவ்வப்போது நித்திரை கொள்கிறேன்.

திரை உலகில் நான் அதிக நேரம் செலவிட்டது உன்னுடனே. மனதில் மிச்சமின்றி பேசி, சிரித்தது உன்னோடுதான். பெண்களைத் தவிர, என் கனவில் வரும் ஒரே ஆண் நீதான்.

நம் உறவு அவ்வளவு ஆழமானதுளூ ஆனால், நமக்குள் விழுந்த பேதம் ஒரு நகம் கிழித்த கோடு போன்றது. ஆயினும், நான்

மென்மையானவன்ஞ அந்தக் கோடு என் விழிகளால் தாங்கப்படாது.

பரணில் கிடக்கும் ஆர்மோனியத்தை எடுத்து, தூசு தட்டி வாசிப்பது போல, உன் தூசுகளைத் துடைத்து, உன்னை நான் ஆர்மோனியமாகவே நேசிக்கிறேன்.

நீளமான வருடங்களின் இடைவெளிக்குப் பின், ராஜாஜி ஹாலில் எம்.ஜி.ஆர். இரங்கல் கூட்டத்தில் நாம் சந்தித்தோம். நீ என்னைக் குறுகுறு பார்வையால் பார்த்தாய்ஞ நானும் உன்னைப் பார்த்தேன். தூண்டிலில் சிக்கிய மீனைப் போல, தொண்டையில் ஏதோ தவித்தது. வார்த்தைகள் துடித்தனஞ ஆனால், வைராக்கியம் தடுத்தது. அன்று இரவு முழுவதும் உன் ஞாபகக் கொசுக்கள் என்னைத் தூங்கவிடவில்லை.

உன்னோடு சேர்ந்த பின் என்னில் எத்தனை மாற்றங்கள்! ஒரே வருடத்தில் சூரியனை என் பக்கம் திருப்பி, சுள்ளென அடிக்க வைத்தாய். இந்த விதைக்குள் இருந்த விருட்சத்தை வெளியே கொண்டு வந்தாய். என் பெயரைக் காற்றுக்குச் சொல்லிக் கொடுத்தவன் நீதான். ஆனால், நீயே ஒரு நாள் எனக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினாய்.

ஒரு கணம் திகைத்தேன். வெள்ளைத் தாமரையாய் இருந்த மனது கார்பன் தாளாய்க் கறுத்தது. பிறகு நிதானமாகச் சிந்தித்தேன். நீ எனக்குச் செய்த நன்மைகள் மட்டுமே நினைவுக்கு வந்தன.

சினிமாக் கம்பெனிகளின் முகவரிகளே தெரியாத வெள்ளை நாட்களில், என்னை வீட்டுக்கு வந்து அழைத்துப் போனாய். நான் கார் வாங்கும் வரை, உன் காரில் என்னை வீட்டில் இறக்கி விட்டுப் போனாய். உன் வீட்டிலிருந்து அனுப்பப்படும் ஒரு கோப்பைப் பாலில் எனக்குப் பாதி கொடுக்காமல் நீ அருந்தியதில்லை. ஷஆயிரம் தாமரை மொட்டுக்களே' பாடல் பதிவாகி முடிந்தபின், பரவசத்துடன் என்னைத் தழுவி, என் கன்னங்களை வருடி, புகைப்படம் எடுக்கச் சொன்னாய். அந்த நினைவுகளின் இதமான உ'ணத்தில், உன் நோட்டீஸ் எரிந்து போனது.

உன் பெயரில் எனக்கு எதிராக ஒரு அறிக்கை வந்தது. இருக்காதே என நினைத்தேன்ஞ ஆனால், உன் கையெழுத்து அதில் இருந்தது. படித்தேன்ஞ சிரித்தேன்ஞ கிழித்தேன்.

உன் எழுத்தில் இருந்த உ'ணத்தை நினைத்து, உன் இதயத்தில் எத்தனை விறகு எரிந்திருக்கும் என யோசித்தேன். காரணமின்றி உன் உள்ளம் கொதித்திருக்கிறது. இது உன் இதயத்துக்கு ஆகாது.

நண்பர் கமல்ஹாசன் என்னை அழைத்து, அவரது புதிய சரித்திரப் படத்துக்கு வசனம் எழுதச் சொன்னார். மகிழ்ச்சியுடன் சம்மதித்தேன். ஆனால், நீ அதைத் தடுத்து விட்டாய். இப்படி அடிக்கடி நான் சிரிக்கச் சந்தர்ப்பம் தருகிறாய், இனியவனே!

இப்போது சொல்கிறேன். உன் பட்டறையில் எனக்கு எதிராக அம்புகள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால், என் யுத்தத் தொழிற்சாலையில் கவசங்கள் மட்டுமே தயாரிக்கப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டிருக்கிறேன். ஏனெனில், நீ என்னை எதிரியாக நினைத்தாலும், நான் உன்னை எதிரியாக நினைக்கவில்லை.

நாம் பிரிந்தபின், உனக்கு வேண்டாதவர்கள் என் வீட்டுக்கு வந்து, உனக்கு எதிரான கூட்டணிக்கு என்னைத் தலைமையேற்கச் சொன்னார்கள். நான் கொதித்தேன். □அவன் சிங்கம்ஞ நானும் சிங்கம். சிங்கத்துக்கும் சிங்கத்துக்குமே யுத்தம். நரிகளின் கூட்டணியுடன் சிங்கங்கள் போர்க்களம் புகுவதில்லை" எனச் சீறினேன். போங்கள்" என அனுப்பினேன். நீ வீழ்ந்தாலும், வீழ்த்தப்பட்டாலும், எனக்கு உடன்பாடில்லை. இவ்வளவு உயரத்தில் ஏறிய ஒரு தமிழன் உருண்டு விடக்கூடாது.

நீயும் நானும் மீண்டும் சேர வேண்டுமென சில தூய இதயங்கள் சொல்கின்றன. ஷஈரமான ரோஜாவே' எழுதி முடித்து, ஆழியாறு அணையின் மீது நடந்தபோது, நீ என்னைத் துரத்தினாய்ஞ நான் ஓடினேன். மழை வந்ததுஞ நின்றேன். நீ என்னைப் பிடித்து, நாம் சேர்ந்தோம். ஏனெனில், அப்போது நாம் ஒரே திசையில் ஓடினோம். ஆனால், இப்போது முடியுமா? நாம் வேறு வேறு திசைகளில் ஓடுகிறோமே!

## ஒரு குட்டிக் கதை, ப்ளீஸ்..?

- தி.மாரிமுத்து, லால்பேட்டை

ஒரு மீனவர் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றபோது, மீன்களோடு ஒரு சிறிய பெட்டியைக் கண்டார். அதைத் திறந்து பார்த்த போது, அதில் ஐந்து வைரங்கள் இருப்பதைக் கண்டார்.

அவற்றை நாட்டின் மன்னனிடம் கொடுக்க முடிவு செய்தார். ஆனால், வழியில் ஒரு வைரத்தை வைத்துக்கொண்டால் தன் வறுமை நீங்கும் என எண்ணி, நான்கு வைரங்களை மட்டும் பெட்டியில் வைத்து மன்னனிடம் கொடுத்தார்.

பெட்டியின் அழகைக் கண்ட மன்னன், அதில் விலை உயர்ந்த பொருள் இருக்கலாம் என நினைத்து, அமைச்சரிடம், □இந்தப் பெட்டியைத் தலைமை அர்ச்சகரிடம் கொடுங்கள். நாளை

பூஜைக்குப் பின் திறப்போம்” என்றார். மேலும், மீனவரைப் பாராட்டி, □உங்கள் நேர்மையைக் கண்டு நாடே வியக்கிறது. எப்போது வேண்டுமானாலும் என்னைச் சந்திக்கலாம். உங்களை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது” என்றார். மீனவருக்கு மகிழ்ச்சியும் குற்றவுணர்வும் ஒருசேர எழுந்தன.

பெட்டியைப் பெற்ற அமைச்சர், யாருக்கும் தெரியாமல் அதைத் திறந்து பார்த்தார். அதில் நான்கு வைரங்கள் இருந்தன. □நான்கும் நாட்டுக்கா? ஒன்று எனக்கு இருக்கட்டும்” என எண்ணி, ஒரு வைரத்தை எடுத்து, மூன்றை மட்டும் பெட்டியில் வைத்து அர்ச்சகரிடம் கொடுத்தார். □இதில் என்ன இருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. விலை உயர்ந்த பொருளாக இருக்கலாம். மன்னர் பூஜைக்குப் பின் திறக்கச் சொன்னார்” என்று கூறி நகர்ந்தார்.

பெட்டியைப் பெற்ற தலைமை அர்ச்சகர், ஆர்வத்தில் திறந்து பார்த்தார். அதில் மூன்று வைரங்கள் இருந்தன. □ஒரு வைரத்தை எடுத்தால் யாருக்குத் தெரியப்போகிறது?” என எண்ணி, ஒன்றை எடுத்து, மீதி இரண்டை பெட்டியில் வைத்து, கடவுள் சிலைக்கு அருகே வைத்துவிட்டு வீட்டுக்குச் சென்றார்.

அமைச்சரும் அர்ச்சகரும் பதட்டமாக இருப்பதை வேவு பார்த்த ஒரு திருடன், இரவில் கோயிலுக்குள் நுழைந்து பெட்டியைக் கண்டார். அதைத் திறந்த போது, இரண்டு வைரங்கள் இருந்தன. □இரண்டையும் எடுத்தால், மன்னர் விசாரணையை முடுக்கிவிடுவார். ஒரு வைரத்தை எடுத்து, ஒரு வைரத்தை விட்டால், அர்ச்சகரோ அமைச்சரோ சந்தேகத்தில் மாட்டுவர்” என எண்ணி, ஒரு வைரத்தை எடுத்து, மற்றொரு வைரத்தை பெட்டியில் வைத்துவிட்டுச் சென்றான்.

இதற்கிடையில், மீனவர் மன்னனின் பாராட்டுகளை எண்ணி, ஒரு வைரத்தை எடுத்தது குறித்து மனம் வருந்தினார். அன்று இரவு அரண்மனைக்குச் சென்று, □மன்னா, பெட்டியில் ஐந்து வைரங்கள் இருந்தன. நான் ஒன்றை எடுத்தேன். குற்றவுணர்வால் உறங்க முடியவில்லை” எனக் கூறி, வைரத்தைக் கொடுத்தார்.

மன்னர் வியந்து, நீங்கள் என்னை மேலும் வியக்க வைக்கிறீர்கள். நீங்கள் இந்நாட்டில் இருப்பது பெருமை. என்னை நண்பராக ஏற்க வேண்டும்” என்று கட்டியணைத்தார். □நாளை அரசவையில் இருங்கள், ஆனால் பேச வேண்டாம்” என்று கூறி, அவரை அரண்மனையில் வைத்தார்.

மறுநாள், மக்களோடு மக்களாக அரசவைக்கு வந்த திருடன், வேடிக்கை பார்த்தான். மன்னர் பெட்டியைத் திறக்கச் சொன்னார். அதில் ஒரு வைரம் மட்டுமே இருந்தது. மீனவரைப் பார்த்து, □அமைதியாக இருங்கள்” என்ற மன்னர், மக்களே, இந்த மீனவர் ஐந்து வைரங்களைக் கண்டார். ஆனால், ஒரு வைரத்தை வைத்து, நான்கை மட்டும் கொடுத்தார். இவரை என்ன செய்யலாம்?” என்று கேட்டார். மக்கள், தண்டனை கொடுங்கள்!” எனக் கூச்சலிட்டனர்.

மன்னர் அமைச்சரைப் பார்த்து, நீங்கள் சொல்லுங்கள்” என்றார். அமைச்சர், மன்னா, ஒரு வைரத்தையாவது கொடுத்தானே, அவனை விடுங்கள்” என்றார். அர்ச்சகரைப் பார்த்து கேட்ட-போது, கடவுள் ஒரு வைரத்தை மட்டுமே கொடுக்க எண்ணியிருப்பார். அவனைத் தண்டிக்க வேண்டாம்” என்றார்.

மன்னர், இன்னொருவர் கருத்து சொன்னால் தீர்ப்பு வழங்குவேன்” என்றார். திருடன் முன் வந்து, மன்னா, ஒரு வைரம் கொடுத்தவனுக்கு பரிசு தர வேண்டும்” என்றான்.

மன்னருக்கு எல்லாம் புரிந்தது. அமைச்சர், அர்ச்சகர், திருடன் மூவரும் தனியே விசாரிக்கப்பட்டனர். ஒவ்வொருவரும் ஒரு வைரத்தைத் திருடியது கண்டுபிடிக்கப்பட்டு, தண்டனை பெற்றனர்.

மீனவர், மன்னா, இவர்கள் திருடர்கள் என எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?” என்று கேட்டார். மன்னர், சபையில் திருட்டுக்கு ஆதரவாகப் பேச-ியவர்கள் இந்த மூவரே. ஒரு திருடனுக்கு ஆதரவாக ஒரு திருடனால் மட்டுமே பேச முடியும்” என்றார்.

## “உழைப்பு உயர்வு தரும்“ என்பதற்கு, ஓர் உண்மை நிகழ்வைக் கூறுங்களேன்?

- த.சிவா, புதுச்சேரி

பிழைக்கத் தெரியாத முட்டாள்” என்று, 18 வயது இளைஞனை அவனது தந்தை திட்டினார். □தோல்விக்கென்றே பிறந்த துரதிர்'டக்காரன்” என்று, நண்பர்கள் கேலி செய்தார்கள்.

அந்த இளைஞன் அடைந்த தோல்விகள், உலகில் வேறு யாரேனும் அனுபவித்திருந்தால், எப்போதோ தற்கொலை செய்திருப்பார்கள். ஆனால், அத்தனை தோல்விகளையும் உள்வாங்கி, பிரமாண்ட வெற்றியை அடைந்த மாமனிதர் தான், சாய்க்கிரோ ஹோண்டா.

வெற்றி என்பது 99 சதவீத தோல்வி-யே” என்று, தன் வாழ்க்கை அனுபவத்தை-தச் சாறு பிழிந்து கூறினார் ஹோண்டா.

டொயோட்டா நிறுவனத்துக்கு உந்துருளி (pisto௳) தயாரிக்கும் தொழிற்கூடம் உருவாக்க

வேண்டும் என்பது, அவரது மாணவப் பருவக் கனவு. யாருக்காகவும் காத்திருக்காமல், தந்தையின் திட்டுகளையும், நண்பர்களின் கேலிகளையும் பொருட்படுத்தாமல், 1928ல், உலோகம் உருக்கும் கூடத்தை உருவாக்கினார்.

இரவு பகலாக உழைத்து, ஒரு வருட கடின உழைப்பின் பயனாக, மாதிரி உந்துருளியை உருவாக்கி, பெரும் எதிர்பார்ப்புடன் டொயோட்டாவுக்கு எடுத்துச் சென்றார். ஆனால், □எங்கள் தரத்துக்கு உனது உந்துருளி இல்லை" என்று பொறியியலாளர்கள் நிராகரித்தனர். முதல் கனவுத் திட்டம் படுதோல்வ-யடைந்தது. முதலீடு வீணானது. எல்லோரும் கேலி செய்தார்கள்.

புழுதி தூற்றுவோர் தூற்றட்டும்" என்ற மனப் பக்குவத்துடன், ஹோண்டா மீண்டும் முயற்சித்தார். பல மாதங்கள் விடா முயற்சியுடன் உழைத்து, புதிய உந்துருளி மாதிரியை உருவாக்கி, டொயோட்டாவுக்கு எடுத்துச் சென்றார். இம்முறை, □அருமை" என்று பாராட்டி, டொயோட்டா ஒப்பந்தம் கொடுத்தது. சிறிய வெற்றிக் களிப்புடன், பெரிய தொழிற்கூடம் கட்டினால் மட்டுமே தேவையான உந்துருளிகளைத் தயாரிக்க முடியும் என உணர்ந்தார். ஆனால், ஜப்பான் உலகப் போருக்கு தயாராகிக் கொண்டிருந்ததால், சிமெண்ட் தட்டுப்பாடு நிலவியது. பத்து மூட்டை சிமெண்ட் கூட கிடைக்கவில்லை.

ஒழுங்கான வேலைக்குப் போ" என்று தந்தையும், வாழ்நாள் முழுவதும் ரிஸ்க் எடுப்பாயா?" என்று நண்பனும் கூறினர். ஆனால், ஹோண்டா, சிமெண்டுக்கு மாற்றாக ஒரு கலவையைக் கண்டுபிடித்து, கடன் வாங்கி, சில மாதங்களில் தொழிற்சாலையைக் கட்டினார்.

தொழிலாளர்களை அமர்த்தி, உந்துருளி தயாரிப்பை அமர்க்களமாகத் தொடங்கினார். ஆனால், இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. அமெரிக்காவின் குண்டு வெடிப்பு தொழிற்சாலையின் பெரும் பகுதியை அழித்தது. ஹோண்டாவின் வாழ்க்கை முடிந்தது" என்று நண்பர்கள் பேசினர். ஆனால், தொழி-லாளர்களுடன் களமிறங்கி, சேதங்களை சரிசெய்து, தொழிற்சாலையை மீண்டும் இயக்கினார்.

ஜப்பானில் நிலநடுக்கங்கள் பயமுறுத்தின. ஒரு நாள், திடீர் நிலநடுக்கம் தொழிற்சாலையைத் தரைமட்டமாக்கியது. மீண்டும் கட்ட முடியாத நிலை. வேறு வழியின்றி, உடைந்த கருவிகளையும் மூலப்பொருட்களையும் டொயோட்டாவுக்கு விற்றார். இந்நிலையில், நான் ஆசைப்பட்ட திட்டம் தோல்வியடைந்தால், துளி கவலைப்பட மாட்டேன். இருக்கும் நிலைமையை மாற்றுவது எப்படி எனச் சிந்திப்பேன்" என்றார் ஹோண்டா.

போர் முடிந்து, ஜப்பானின் பொருளாதாரம் சாம்பலானது. பெட்ரோல் தட்டுப் பாட்டால் கார்கள் முடங்கின. மக்கள் நடந்தோ, சைக்கிளில் சென்றோ பயணித்தனர்.

ஒரு நாள், வீட்டில் அமர்ந்திருந்த ஹோண்டா, அருகில் இருந்த சைக்கிளையும், தொலைவில் இருந்த புல்வெட்டும் இயந்திரத்தையும் பார்த்தார். □புல்வெட்டும் இயந்திரத்தின் மோட்டாரை சைக்கிளில் பொருத்தினால் என்ன?" என்ற யோசனை தோன்றியது.

அடுத்த நொடியில், மோட்டாரைக் கழற்றி, சைக்கிளில் பொருத்தினார். உலகின் முதல் மோட்டார் சைக்கிள் பிறந்தது. ஆனந்தமாக அதை ஓட்டிச் சென்றார்.

எங்களுக்கும் செய்து கொடு" என்று மக்கள் மொய்த்தனர். ஹோண்டா சளைக்காமல் செய்து கொடுத்தார். விளைவு? ஊரில் மோட்டார் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதைப் பெரிய தொழிலாக மாற்ற முடிவு செய்தார். கையில் பணமில்லை. வங்கிகள் கடன் மறுத்தன. □ஹோண்டா துரதிர்'டக்காரன்" என்று எல்லோரும் கூறினர். ஆனால், ஹோண்டா கலங்கவில்லை. ஜப்பானில் உள்ள 18,000 சைக்கிள் கடைக்காரர்களுக்கு கடிதம் எழுதி, தொழிலுக்கு முதலீடு செய்ய வேண்டினார். முதலீடு செய்பவர்கள் விநியோகஸ்தர்களாக நியமிக்கப்படுவர் என உறுதியளித்தார்.

5,000 கடைக்காரர்கள் முதலீடு செய்தனர். ஹோண்டா மோட்டார் சைக்கிள் நிறுவனம் உதயமானது.

முதல் மோட்டார் சைக்கிளுக்கு விமர்சனங்கள் வந்தபோது, உலோகம் உருக்கும் கூடத்தில் அமர்ந்து, அழகான வடிவமைப்புடன் அற்புதமான மோட்டார் சைக்கிள்களை உருவாக்கினார்.

தொடர் தோல்விகளுக்குப் பின், சாய்க்கிரோ ஹோண்டா பெரும் வெற்றி பெற்றார். இன்று, ஹோண்டா நிறுவனம் ஆண்டுக்கு சுமார் இரண்டு கோடி மோட்டார் வாகனங்களைத் தயாரிக்கிறது.

முயற்சியை மூலதனமாகவும், தன்னம்பிக்கையை மனதில் வைத்தும், வைராக்கியத்துடன் உழைப்பவருக்கு வெற்றி கைகூடாமல் போனதில்லை, நண்பர்களே!

## ஓஹோ எந்தன் பேபி படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா!



ரோமியோ பிக்சர்ஸ் மற்றும் விஷ்ணு விஷால் ஸ்டுடியோஸ் பெருமையுடன் தயாரித்து வழங்கும் ரொமாண்டிக் எண்டர்டெய்னர் திரைப்படம் "ஓஹோ எந்தன் பேபி" இன் அசோசியேஷன் வித் குட் ஷோ. இந்தப் படத்தை கிருஷ்ணகுமார் ராமகுமார் இயக்கி இருக்க நடிகர்- தயாரிப்பாளர் வஷ்ணு விஷாலின் இளைய சகோதரர் ருத்ரா கதாநாயகனாக அறிமுகமாகிறார். படம் ஜூலை 11 அன்று திரையரங்குகளில் வெளியாகிறது. படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா நடைபெற்றது.

நடிகர் விஷ்ணு விஷால், " விஷ்ணு விஷால் ஸ்டுடியோஸ் மற்றும் ரோமியோ பிக்சர்ஸ் சார்பில் அனைவருக்கும் வணக்கம்! "ஓஹோ எந்தன் பேபி" படத்தின் டிரெய்லர் வெளியாவதற்கு முன்பு எனது தம்பி ருத்ராவை இங்கு நடிகராக அறிமுகப்படுத்த விரும்புகிறேன். ருத்ரா எனது பெரியப்பா மகன் எனது சொந்தத் தம்பி இல்லை. அப்பா - பெரியப்பா இருவரும் எளிமையான குடும்ப பின்னணியில் இருந்து வந்தவர்கள். இருந்தாலும் அவர்களுக்கு சினிமா மீது தீராத காதல் உண்டு. படத்திற்கு ஒரு டிக்கெட் வாங்கிவிட்டு அதில் முதல் பாதி ஒருவரும், இரண்டாம் பாதி இன்னொருவரும் பார்த்துவிட்டு படம் முடிந்த பிறகு இருவரும் மாற்றி மாற்றி கதை சொல்லி கொள்வார்கள். அப்படியான சினிமா பைத்தியம் அவர்கள். இருவரும் பத்தாம் வகுப்பு வரை படித்தார்கள். பிறகு எனது பெரியப்பாவிற்கு படிப்பு வரவில்லை. அதனால் அவர் வேலைக்கு சென்று எனது அப்பாவை படிக்க வைத்து ஐபிஎஸ் ஆக்கினார். அவருடைய பையன் தான் ருத்ரா. ருத்ராவுக்கு நான் செய்ய வேண்டிய கடமை எப்படிப்பட்டது என்பது இந்த கதை மூலம் உங்களுக்கு புரிந்திருக்கும். நான் சினிமாவில் நடிக்க வேண்டும் என்பதை அவர்தான் ஃ போர்ஸ் செய்தார். இன்று இந்த மேடையில் நான் இருக்க காரணமே அவர்தான். அப்படி என்றால் ருத்ராவை எந்த அளவுக்கு அவர் சொல்லி வளர்த்திருப்பார் என்று பாருங்கள். நிச்சயம் உங்கள் ஆதரவு எங்கள் குடும்பத்திற்கு வேண்டும்" என்றார்.

தயாரிப்பாளர் தனஞ்செயன், "டிரெய்லர் அட்டகாசமாக இருக்கிறது. வி்ணு வி'ால் ஸ்டுடியோஸ் என்றாலே வெற்றி படங்கள்தான். அந்த வரிசையில் இந்த படமும் உங்களுக்கு வெற்றியாக அமையும். வஷ்ணு விஷால் சொன்ன கதை எமோஷனலாக இருக்கிறது. இதையே ஒரு படமாக எடுக்கலாம். நான் என் குடும்பத்தின் சப்போர்ட் இல்லாமல் தான் சினிமாவுக்குள் வந்தேன். அப்படி இருக்கும் பொழுது உங்கள் கதை எனக்கு நெகிழ்ச்சியாக இருந்தது. கடந்த சில வருடங்களாக தமிழ் சினிமாவில் ஒரு டிரெண்ட் இருக்கிறது. எதாவது ஒரு பழைய ஹிட் பாடல் அந்தப் படத்தில் இடம் பெற்றிருந்தால் படம் சூப்பர் ஹிட் தான். "லியோ" முதல் "டூரிஸ்ட் ஃ பேமிலி" வரை இதற்கு உதாரணம் சொல்லலாம். நீங்கள் ஒரு பழைய ஹிட் பாடலையே டைட்டிலாக வைத்திருக்கிறீர்கள். நிச்சயம் படம் வெற்றி பெறும்! ருத்ரவாவுக்கு ஹீரோவுக்கான சார்ம் உள்ளது. நீங்களும் படமும் வெற்றி பெற வாழ்த்துக்கள். தமிழ் சினிமாவில் இயக்குநர்களும் தயாரிப்பாளர்களும் போதை தொடர்பான காட்சிகளை வைக்கக்கூடாது என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்".

நடிகர் ரெடின் கிங்ஸ்லி, " ரொம்பவே ஸ்வீட்டான படம் இது. விஷ்ணு விஷாலுடைய தம்பி அவரை விடவே இன்னும் நன்றாகவே நடிக்கிறார். ஏ.ஆர். முருகதாஸிடம் ருத்ரா உதவி இயக்குநராக வேலை செய்தார். இயக்கம் கற்றுக் கொண்டாரோ இல்லையோ சூப்பராக நடிக்க கற்றுக் கொண்டார்" என்றார்.

தயாரிப்பாளர் கலைப்புலி எஸ். தாணு, " இளைஞர்களுக்கான படம் என்பதை அதன் முன்னோட்டம் பார்க்கும் போதே தெரிகிறது. அவ்வளவு இளமையாக இருக்கிறது. ருத்ராவுக்கு வாழ்த்துக்கள்! விஷ்ணு விஷால் சொன்ன கதையும் நன்றாக இருந்தது. விரைவில் யாராவது படம் ஆக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்".

தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி, "எனது கரியரை தொடங்கியதில் இருந்தே விஷ்ணு விஷாலின் அப்பா எனக்கு வழிகாட்டியவர். அவர்களின்

குடும்பத்தையும் அந்த எமோஷனையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. படக்குழுவினருக்கு வாழ்த்துக்கள்".

இயக்குநர் மனு ஆனந்த், " ருத்ரா சிறப்பாக இந்த படத்தில் நடித்திருக்கிறார். அடுத்தடுத்த பெரிய பாதைக்கு இந்த படம் நல்ல தொடக்கம். வி'ஷணு விஷால் அவருடைய கரியரை தாண்டி அதிகம் பேசி இருப்பது ருத்ராவை பற்றி தான். வாழ்த்துக்கள்".

இயக்குநர் வெற்றிமாறன், "விஷ்'ணு விஷால் தனது தம்பியை ஹீரோவாக அறிமுகப்படுத்தப் போகிறோம் என்று என்னை முன்பு சந்தித்தபோது சொல்லியிருந்தார். இப்பொழுது மேடையில் அவரது கதையை கேட்ட பின்பு அந்த வார்த்தையின் அர்த்தமும் கனமும் புரிகிறது. அவரது வாழ்க்கையின் நல்ல விஷயத்தை எங்களுடன் பகிர்ந்து கொள்ளும் பொழுது எங்களுக்கும் அது மகிழ்ச்சியை கொடுக்கிறது. படத்தின் பாடல்கள் அனைத்தும் அருமையாக உள்ளது. படத்தில் நடித்திருப்பவர்களின் ரிதமும் நண்பர்களை போலவே இருக்கிறது. படம் வெற்றி பெற வாழ்த்துக்கள்!"

நடிகர் கார்த்தி, "விஷ்'ணு விஷால் மேடையில் சொன்ன கதையை கேட்ட போது "வானத்தை போல" படம் போல இருந்தது. அந்த படத்தை போல உண்மையில் இருப்பார்களா என்று நினைத்தேன். ஆனால், இருக்கிறார்கள் என்பது ஆச்சரியம் தான்! அப்பா நம்மை கையில் தூக்கி வைத்திருந்தால் அண்ணா தோளில் தூக்கி வைத்திருப்பார். அந்த வகையில் நான் ரொம்பவே அதிர்'டசாலி! அதற்காகத்தான் இந்த நிகழ்ச்சிக்கும் வந்தேன். நான் புதிதாக திரைத்துறையில் நுழையும் பொழுது அத்தனை பேர் என்னை வாழ்த்தினார்கள், அன்பு கொடுத்தார்கள். அந்த அன்பை திரும்ப கொடுக்கவே இங்கு வந்தேன். ரசிகர்கள் தியேட்டரில் ஜாலியாக இருக்கவே வருகிறார்கள். வெற்றிமாறன் சார் தான் சீரியஸான படங்கள் எடுக்கும் டிரெண்டை உருவாக்கி விட்டார். அதேபோல இயக்குநர் கிருஷ்'ணாவும் நல்ல நடிகர். இயக்குநராக அருக்கும் வாழ்த்துக்கள். படம் பெரிய வெற்றி பெற வேண்டும்".

இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து, "ருத்ராவுக்கும் படக்குழுவினருக்கும் வாழ்த்துக்கள்! எனக்கு இப்படி ஒரு அண்ணன் இல்லையே என வருத்தமாக உள்ளது. மிதிலாவுடன் நான் தெலுங்கில் "ஓ மை கடவுளே!" செய்திருக்கிறேன். அவருக்கு தெலுங்கு தெரியாது. ஆனால் ஒரு சிங்கிள் டயலாக் கூட மிஸ் செய்யாமல் புரொப'னலாக நடித்தார். தமிழில் அவர் சரியான குழுவினருடன் அறிமுகமாவதில் மகிழ்ச்சி. வாழ்த்துக்கள்!"

தயாரிப்பாளர் ஐசரி கணேஷ்', "டிரெய்லர் பார்க்கும் பொழுதே ருத்ரா மற்றும் படக்குழுவினர் எந்த அளவுக்கு சிறப்பாக வேலை பார்த்திருக்கின்றனர் என்று தெரிகிறது. நான் ஒரு கல்வியாளர். இருந்தாலும் படங்கள் நிறைய தயாரித்துக் கொண்டிருக்கிறேன். அது ஒரு தனி கதை! இதுவரை என் கதை மட்டும் தான் பெரிது என நினைத்திருந்தேன். ஆனால் வி'ணு வி'ால் சொன்ன அவர் குடும்ப கதையிலிருந்து நான் இன்னும் வெளியே வரவில்லை. விஷ்'ணு விஷால் நல்ல அண்ணன், நடிகர் என்பதை தாண்டி அவர் ஒரு நல்ல தயாரிப்பாளர். அவருடைய விஷ்'ணு விஷால் ஸ்டுடியோஸ் உடன் இணைந்து நாங்கள் மூன்று படங்கள் தயாரிக்க இருக்கிறோம். வாழ்த்துக்கள்!".

இயக்குநர் தியாகராஜா குமாரராஜா, "படம் வெற்றி பெற வாழ்த்துக்கள்! இயக்குநர் கிருஷ்'ணா என்னுடைய காலேஜ் ஜூனியர். எந்த ஒரு மொமெண்ட் கொடுத்தாலும் அதை சுவாரஸ்யமாக மாற்றி விடுவார். படக்குழுவினருக்கு வாழ்த்துக்கள்".

இயக்குநர் செல்ல அய்யாவு, " இயக்குநர் கிருஷ்'ணா ஒரு நல்ல நடிகர். அவரை தமிழ் சினிமா விடாதே என்று யோசித்த போதுதான் விளம்பரங்கள், இயக்கம் என கலக்கிக் கொண்டிருந்தது தெரிய வந்தது. ருத்ராவை வைத்து நான் தான் முதல் படம் செய்வதாக இருந்தது. ஆனால் கிரு'ணா முந்தி கொண்டார். ருத்ரா ஹீரோவாக வேண்டும் என விரும்பாமல் அதற்காக தன்னை கடுமையாக தயார் செய்து கொண்ட ஒரு நபர். அவருக்கும் படக்குழுவினருக்கும் வாழ்த்துக்கள்".

நடிகர் விஜய் ஆதிராஜ், " வி'ஷணு விஷாலுக்கு சிறந்த தம்பி கிடைத்துள்ளார். அந்த அளவிற்கு சிறப்பாக தன்னை தயார் படுத்திக் கொண்டுள்ளார். படக்குழுவினருக்கும் தொழில்நுட்பக் குழுவினருக்கும் வாழ்த்துக்கள்! படம் நிச்சயம் வெற்றி பெறும்".

ஒளிப்பதிவாளர் ஹரி' கல்யாண், "பெரிய சிரமம் இல்லாமல் எல்லோரும் குடும்பமாக வேலை பார்த்தோம். நன்றி".

எடிட்டர் கண்ணா, " இது என்னுடைய முதல் படம். என்னை நம்பி வாய்ப்பு கொடுத்த இயக்குநர் கிருஷ்'ணாவுக்கு நன்றி. படம் நன்றாக வந்திருக்கிறது".

இசையமைப்பாளர் ஜென் மார்ட்டின், " எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி. இயக்குநர் கிருஷ்'ணாவை நடிகராக தெரியும். அவர்தான் இயக்கம் என்றதும் ஆச்சரியப்பட்டேன். ருத்ரா சிறப்பாக நடித்திருக்கிறார். மியூசிக்கலாக படத்தில் பெரிய

ஸ்கோப் இருந்தது. இசை கேட்டுவிட்டு சொல்லுங்கள்".

நடிகை மிதிலா, " சென்னைக்கு வந்துள்ளது மீண்டும் என்னுடைய வீட்டிற்கு வந்தது போன்ற ஒரு உணர்வை கொடுத்துள்ளது. என்னை தேர்ந்தெடுத்த இயக்குநர், தயாரிப்பாளர் ருத்ரா மற்றும் படக்குழுவினர் அனைவருக்கும் நன்றி. படத்தில் நானும் பாடியிருக்கிறேன். கேட்டுவிட்டு சொல்லுங்கள்".

இயக்குநர் கிருஷ்ணகுமார் ராமகுமார், " நடிகனாக ஆரம்பித்ததில் இருந்து இப்பொழுது இயக்குநர் ஆனது வரை என்னை ஆதரித்த அனைவருக்கும் நன்றி. நான் நடிகனாக இருந்த பொழுது நான் என்ன வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், இயக்குநரான பின்பு என்னுடைய படம் தான் பேச வேண்டும். நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்பதை ஜூலை 11 அன்று திரையரங்குகளில் பாருங்கள். பொதுவாக, இயக்குநர் தான் நடிகருக்கு கதை சொல்வார்கள். ஆனால், எனக்கு இங்கு ருத்ரா தான் கதை சொன்னார். ஒரு நடிகராக தன்னை சிறப்பாக ருத்ரா தயார் செய்து இருக்கிறார். என்னுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு விஷ்ணு விஷால் இந்த படத்தில் ஒரு கேரக்டர் ரோல் செய்து இருக்கிறார். மிதிலாவும் தமிழ் வசனங்களை மனப்பாடம் செய்து கொண்டு சிறப்பாக நடித்திருக்கிறார்".

நடிகர் ருத்ரா, "இந்த தருணத்திற்காக தான் பல நாட்கள் காத்திருந்தேன். கனவு நனவாகி விட்டது. அண்ணன் என்னை ஹீரோவாக அறிமுகம் செய்வதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். சினிமா தான் என்னுடைய முதல் நண்பன். உதவி இயக்குநராக இருந்து பின்பு நடிகராகலாம் என்பது கார்த்தி சாரை பார்த்து தான் ஐடியா வந்தது. இந்த மேடை எவ்வளவு முக்கியம் என்பது எனக்கு தெரியும். நான் நன்றாக நடித்து இருக்கிறேன் என்றால் அதற்கு காரணம் இயக்குநர் கிருஷ்ணா தான். நடிகர்கள், தொழில்நுட்பக் குழுவினர் எல்லோரும் சிறப்பாக பணியாற்றியுள்ளனர். ஜென் மார்ட்டின் இசை மிகவும் பிடிக்கும். என்னுடைய குடும்பம், நண்பர்களுக்கு நன்றி. என்னுடைய அண்ணனுக்கு ஸ்பெஷல் நன்றி! அவரிடம் இருந்து நிறைய விஷயங்கள் கற்றுக் கொண்டேன். படம் பார்த்து விட்டு சொல்லுங்கள்" என்றார்.

நடிகர் விஷ்ணு விஷால், " எங்களுடைய குடும்ப கதையை புரிந்து கொண்டு அன்பும் ஆதரவும் கொடுத்த அனைவருக்கும் நன்றி. இந்த விழாவின் நாயகன் ஜென்மார்ட்டின் தான். புதுமுகங்கள் அறிமுகமாகும் ஒரு படத்திற்கு பாடல்களும் இசையும் மிகவும் முக்கியம். நல்ல குடும்ப கதைகளை ரசிகர்கள் விரும்பி பார்க்கிறார்கள் என்பதற்கு "டூரிஸ்ட் ∴ பேமிலி", "டிராகன்" போன்ற படங்களின் வெற்றியே உதாரணம். இயக்குநர் கிருஷ்ணா அற்புதமாக இயக்கியுள்ளார். அனைத்து நடிகர்களுக்கும் வாழ்த்துக்கள்".

## தீபாவளிக்கு வெளியாகும்: லெஜெண்ட் சரவணனின் புதிய படம்

மாஸ், ஆக்ஷன், சஸ்பென்ஸ், திரில்லராக இன்றைய டிரெண்ட்டுக்கு ஏற்ற வகையில் திரைப்படம் இருக்கும்: லெஜெண்ட் சரவணன்

லெஜெண்ட் சரவணனின் புதிய திரைப்படம் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், அது குறித்த ருசிகரத் தகவல்களை அவர் பகிர்ந்துள்ளார்.

தனது உறவினரின் திருமணத்தில் கலந்து கொண்ட லெஜெண்ட் சரவணன் கூறியதாவது: "என்னுடைய அடுத்த படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. விரைவில் படப்பிடிப்பும், போஸ்ட் ப்ரொடக்ஷன் பணிகளும் நிறைவடையும். படத்தை தீபாவளிக்கு உலகெங்கும் உள்ள திரையரங்குகளில் வெளியிட திட்டமிட்டுள்ளோம்.

மாஸ், ஆக்'ன், சஸ்பென்ஸ், திரில் என அனைத்து சுவாரசிய அம்சங்களும் நிறைந்து இன்றைய டிரெண்ட்டுக்கு ஏற்ற வகையில் திரைப்படம் இருக்கும், டைட்டிலும் மாஸாக இருக்கும். ஒரு புதிய ஜானரில் இப்படம் அனைவரையும் கவரும்.

படம் குறித்த மேலும் தகவல்கள் விரைவில் வெளியாகும். மொத்தத்தில் இந்த தீபாவளி நம்ம தீபாவளியாக, அனைவரின் தீபாவளியாக இருக்கும். நன்றி, வணக்கம்."

தி லெஜெண்ட் நியூ சரவணா ஸ்டோர்ஸ் புரொடக்ஷன்ஸ் பிரம்மாண்ட பட்ஜெட்டில் தயாரிக்கும் இப்படத்தை வெற்றி மற்றும் பாராட்டுகளை குவித்த ஷகருடன்' திரைப்படத்தின் இயக்குநர் ஆர்.எஸ் துரை செந்தில்குமார் இயக்குகிறார். "காக்கி சட்டை", "கொடி", உள்ளிட்ட சூப்பர் ஹிட் படங்களையும் இவர் இயக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

புதுமையான கதைக் களத்தில் அனைத்து தரப்பு ரசிகர்களையும் கவரும் வகையில் விறுவிறுப்பான திரைக்கதையோடு உருவாகும் இந்த படத்தில் பிரபல பாலிவுட் நடிகையான பாயல் ராஜ்புத் நாயகியாக நடிக்கிறார். 'ஷாம், ஆண்ட்ரியா, பாகுபலி பிரபாகர், சந்தோஷ்' பிரதாப், பேபி இயல் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர், ஜிப்ரான் இசையமைக்கிறார்.

இப்படத்திற்கு எஸ். வெங்கடேஷ்' ஒளிப்பதிவு செய்ய பிரதீப் படத்தொகுப்பை கவனிக்கிறார். கலை இயக்கம்: துரைராஜ், நிர்வாக தயாரிப்பு: அம்பிகாபதி, உடைகள் வடிவமைப்பு: தீப்தி, புகைப்படங்கள் சுரே', போஸ்டர் வடிவமைப்பு: தினேஷ்', சண்டை காட்சிகள்: மேத்யூ மகேஷ்'.

## ஏஜிஎஸ் என்டர்டெய்ன்மென்ட் - அஸ்வத் மாரிமுத்து - பிரதீப் ரங்கநாதன் கூட்டணி வழங்கிய "டிராகன்" திரைப்படத்தின் நூறாவது நாள் வெற்றி விழா



ஏ ஜி எஸ் என்டர்டெயின்மென்ட் நிறுவனத்தின் சார்பில் கல்பாத்தி எஸ். அகோரம், கல்பாத்தி எஸ். கணேஷ்', கல்பாத்தி எஸ். சுரேஷ்' தயாரிப்பில், கிரியேட்டிவ் புரொடியுசர் அர்ச்சனா கல்பாத்தி, அசோசியேட் கிரியேட்டிவ் புரொடியுசர் ஐஸ்வர்யா கல்பாத்தி ஆகியோரின் வழிகாட்டலில், அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில், பிரதீப் ரங்கநாதன், கயாடு லோஹர், அனுபமா பரமேஸ்வரன் - கே எஸ் ரவிக்குமார், மிஷ்'கின் உள்ளிட்டோர் நடித்து வெளியான "டிராகன்" திரைப்படம் ரசிகர்களின் பேராதரவுடன் நூறாவது நாளைக் கடந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இப்படத்தின் நூறாவது நாள் வெற்றி விழாவை படக்குழுவினர் படத்தில் பணியாற்றிய அனைவருக்கும் விருதுகள் வழங்கி கௌரவிக்கும் வகையில் ஒருங்கிணைத்திருந்தனர்.

சென்னையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு வருகை தந்த அனைவரையும் ஏஜிஎஸ் நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி (CFO) ரங்கராஜன் வரவேற்றார்.

இதனைத் தொடர்ந்து படத்தின் பிரம்மாண்டமான வெற்றிக்கு உறுதுணையாக இருந்த திரையரங்க அதிபர்கள், விநியோகஸ்தர்கள், பிரதீப் ரங்கநாதன், ஜார்ஜ் மரியான், ரோஹந்த் உள்ளிட்ட நடிகர்கள், இயக்குநர், ஒளிப்பதிவாளர், இசையமைப்பாளர், படத் தொகுப்பாளர் உள்ளிட்ட தொழில்நுட்ப கலைஞர்கள், தயாரிப்பு நிர்வாகிகள், தொழிலாளர்கள் என படத்தில் பணியாற்றிய அனைவருக்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் குரோம்பேட்டை வெற்றி திரையரங்க அதிபர் ராகேஷ்' பேசுகையில், ""மிகவும் சந்தோஷமான நாள் இது. "டிராகன்" படத்தின் நூறாவது நாள் வெற்றி விழா. பொதுவாக தமிழ் திரையுலகில் பிப்ரவரி மாதம் குறைவான வசூல் இருக்கும் என்று ஒரு கட்டுக்கதை இருக்கிறது. பிப்ரவரியில் ஒரு திரைப்படத்தை வெளியிட்டால் அது வெற்றி பெறாது என்ற கட்டுக்கதையை உடைத்து எறிந்து வெற்றி பெற்ற திரைப்படம் "டிராகன்". இந்த ஆண்டு தமிழக திரையரங்குகளில் வெளியான திரைப்படங்களில் அதிக வசூலை ஈட்டிய திரைப்படங்களில் ஒன்று அல்லது இரண்டாவது இடத்தை " டிராகன்" பிடித்திருக்கிறது. இப்படத்தின் நாயகனான பிரதீப் இளைஞர்கள் மத்தியில் மிகப்பெரிய நட்சத்திரமாக உயர்ந்திருக்கிறார். அவர் தொடர்ந்து வெற்றி படங்களை வழங்க வேண்டும் என வாழ்த்துகிறேன். ஏஜிஎஸ் நிறுவனம் தொடர்ந்து வெற்றி படங்களை அளித்து வருகிறது. அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் வெளியான "ஓ மை கடவுளே" திரைப்படமும் சிறந்த படம் தான். அவர் இயக்கும் படங்கள் வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்,"" என்றார்.

கமலா சினிமாஸ் திரையரங்கத்தின் உரிமையாளர் விஷ்'ணு பேசுகையில், ""குழுவாக இணைந்து இந்த படத்தை வழங்கி வெற்றி பெற செய்து இருக்கிறீர்கள். இந்த வெற்றியை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. திரையரங்க உரிமையாளர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் இருக்கிறோம். இத்திரைப்படம் வெளியான முதல் நாளன்று படக்குழுவினர் எங்கள் திரையரங்கத்திற்கு வருகை தந்தனர். அப்போது நான் "இப்படத்தின் நூறாவது நாள் வெற்றி விழாவில் நிச்சயமாக சந்திப்போம்" என்று தான் சொல்லி இருந்தேன். அது இன்று உண்மையாகி இருக்கிறது. தொடர்ந்து வெற்றி படங்களை அளித்து வரும் ஏஜிஎஸ் நிறுவனத்திற்கு எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். 2024ம் ஆண்டு ஏஜிஎஸ் நிறுவனம் வெளியிட்ட "கோட்"( GOAT) திரைப்படம் வசூலில் வெற்றி பெற்றது. அதைத் தொடர்ந்து 2025ம் ஆண்டில் "டிராகன்" திரைப்படம் வசூலில் வெற்றி பெற்றிருக்கிறது. பிரதீப் ரங்கநாதன் நடிப்பில் வெளியான "லவ் டுடே" திரைப்படத்தின் நூறாவது நாள் வெற்றி விழா விருதினை வாங்கி இருக்கிறோம். அதைத்தொடர்ந்து அவரது நடிப்பில் வெளியான "டிராகன்" படத்தின் நூறாவது நாள் வெற்றி விழா விருதினையும் வாங்கியிருக்கிறோம். தொடர்ந்து அவர் நடிக்கும் "DUDE' படத்திற்கும்

விருதினை வாங்குவோம். ஏஜிஎஸ் -அஸ்வத்- பிரதீப்- கூட்டணி மீண்டும் இணையும் என்று அறிவித்திருக்கிறீர்கள். அதற்காக ஆவலுடன் காத்திருக்கிறோம் நன்றி,"" என்றார்.

இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து பேசுகையில், ""இந்த நான்கு மணி நேரத்தை நான் ஒரு அழகான தருணமாக கருதுகிறேன். படத்தின் வெற்றிக்காக உழைத்த அனைவருக்கும் அழைப்பு விடுத்து அவர்களுக்கு விருது வழங்க வேண்டும் என்று எண்ணிய ஏஜிஎஸ் நிறுவனத்திற்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு கலைஞருக்கு மிகப்பெரிய அங்கீகாரமே தயாரிப்பாளர்கள் கையாலோ அல்லது இயக்குநர் கையாலோ அல்லது நாயகன் கையாலோ விருது வாங்குவதுதான். இதனை சாதித்து காட்டிய ஏஜிஎஸ் நிறுவனத்திற்கு மீண்டும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மடிப்பாக்கம் ஏரியாவில் நானும், பிரதீப்பும் ஊர் சுற்றிக் கொண்டிருந்தபோது, ஒரு நாள் "நான் ஹீரோவாக போகிறேன்" என்று பிரதீப் சொன்னார். உடனே நல்ல விஷயம் என வாழ்த்து தெரிவித்தேன். அந்தத் தருணத்தில் நாங்கள் "டிராகன்" என்ற ஒரு படத்தில் இணைந்து பணியாற்றுவோம் என்றோ, அந்தப் படத்தின் நூறாவது நாள் வெற்றி விழாவ-ில் சந்திப்போம் என்றோ நினைத்துக் கூட பார்க்கவில்லை.

"லவ் டுடே" படத்தை விட "டிராகன்" படத்தின் மூலம் ஏராளமான ரசிகர்களை பெற்றிருக்கிறார் பிரதீப் ரங்கநாதன். இங்கு வெவ்வேறு ஊர்களில் இருந்து அவருடைய ரசிகர்கள் வருகை தந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்தத் தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்காலத்தில் பிரதீப் ரசிகர்கள் அதிகமாகி நேரு ஸ்டேடியமே நிறைந்து விடும். அதற்காகவும் காத்திருக்கிறேன். வருகை தந்த அனைவருக்கும் நன்றி,"" என்றார்.

கிரியேட்டிவ் புரொடியுசர் அர்ச்சனா கல்பாத்தி பேசுகையில், ""ஒரு படம் நன்றாக இருக்கும் போது அந்தப் படத்திற்கான வேர்ட் ஆ.்.ப் மவுத் எவ்வளவு முக்கியமோ, அதே அளவிற்கு ஊடகங்களின் பங்களிப்பும் முக்கியம். இந்தப் படத்தின் பத்திரிகையாளர் காட்சிக்குப் பிறகு இந்தப் படம் மிகப்பெரிய வெற்றியை பெறும் என்று பத்திரிகையாளர்களாகிய நீங்கள் பாராட்டினீர்கள். அதை ர சிகர்களிடமும் கொண்டு சேர்த்தீர்கள். இதற்காக இந்த தருணத்தில் ஊடகத்தினருக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்,"" என்றார்.

நடிகர் பிரதீப் ரங்கநாதன் பேசுகையில், ""இயக்குநர் அஸ்வத்-தும், நானும் நண்பர்கள் என்று அனைவருக்கும் தெரியும். அவர் "ஓ மை கடவுளே" படத்தின் கதையை எழுதிக் கொண்டிருந்த போது ஒரு முறை என்னிடம், "இப்படி ஒரு கதாபாத்திரம் இருக்கிறது. அதில் நீ நடிக்கிறாயா?" என கேட்டார். அதற்கு நான் "நடித்தால் ஹீரோவாகத் தான் நடிப்பேன்" என்று பதிலளித்தேன். அப்போது நான் "கோமாளி" படத்தையும் இயக்கவில்லை. "லவ் டுடே" படத்திலும் நடிக்கவில்லை. இருந்தாலும் என் மீது அஸ்வத் நம்பிக்கை வைத்தார்.

அதன் பிறகு "லவ் டுடே" படத்தில் நடித்து முடித்த பிறகு, படம் வெளியாவதற்கும் முன் அஸ்வத்திற்கு திரையிட்டு காண்பித்தேன். அப்போது அவரிடம் என்னை ஹீரோவாக வைத்து படம் இயக்குவாயா? எனக் கேட்டேன். காலம் கனியட்டும் என பதிலளித்தார். நானும் நாங்கள் இருவரும் இணைந்து பணியாற்றுவதற்கு சிறிது கால அவகாசம் ஆகும் என நினைத்தேன். ஆனால் அதனை ஒரே படத்தில் சாதித்து காட்டியது ரசிகர்கள் தான்.

"டிராகன்" படத்தை இயக்கியதற்காக அஸ்வத் மாரிமுத்துவுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நடித்தால் ஹீரோவாக த்தான் நடிப்பேன் என்று என் மீது நான் வைத்த குருட்டு நம்பிக்கை ரசிகர்களின் ஆதரவால் ஈடேறியது.

இதனைத் தொடர்ந்து இந்த படத்தின் வெற்றிக்கு ஏஜிஎஸ் நிறுவனமும் காரணம். இந்த நிறுவனத்துடன் நான் இணைந்து பணியாற்றிய இரண்டாவது நூறு நாள் படம் இது. "லவ் டுடே" படத்தின் வெற்றி மேஜிக் என்றார்-கள். இதனால் மீண்டும் ஒரு வெற்றி படத்தை வழங்க வேண்டுமே என நினைத்தோம். இந்தத் தருணத்தில் ஏஜிஎஸ் நிறுவனமும் இயக்குநர் அஸ்வத்தும் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு திரைப்படத்தை உருவாக்குவதாக இருந்தது. அப்படித் தான் "டிராகன்" அமைந்தது. ஏஜிஎஸ் நிறுவனத்துடனான மகிழ்ச்சி நிரம்பிய இந்தப் பயணம் தொடரும்.

"கோமாளி", "லவ் டுடே", "டிராகன்" என என்னுடைய தொடர் மூன்றாவது நூறு நாள் திரைப்படம் இது. மகிழ்ச்சியாக இருக்கிறது. இதில் "டிராகன்" படத்தின் வெற்றி முக்கியமானது. ஏனெனில் "கோமாளி", "லவ் டுடே" ஆகிய இரண்டு திரைப்படங்களின் வெற்றியின் காரணமாக "டிராகன்" படத்திற்கான எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது.

என்னுடைய வெற்றிக்கு பின்னணியில் அஸ்வத், ஏஜிஎஸ் நிறுவனம், ரசிகர்கள் இருக்கிறார்கள். "டிராகன்" படத்தின் வெற்றி மூலம் ரசிகர்கள் என்னை மிக உயர்ந்த இடத்திற்கு அழைத்துச் சென்று இருக்கிறார்கள். இதற்காக அவர்களுக்கு என்றென்றும் நன்றி உள்ளவனாக இருப்பேன். இந்த படத்தில் பணியாற்றிய நடிகர்கள்-நடிகைகள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் அனைவருக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்,"" என்றார்.

# அன்னாசி பழம்!

- பாப்பனப்பட்டு வ.முருகன்

இயற்கை நமக்களித்துள்ள கொடைகளில் முக்கியமான ஒன்று, அன்னாசி பழம். இதில், மாங்கனீஸ் சத்துக்கள், வைட்டமின் சி மற்றும் தையாமின் அதிகம் உள்ளன. மேலும், புரதத்தை செரிக்கக் கூடிய புரோமலைன் என்ற என்சைம், இதில் ஏராளமாக உள்ளது. இது, பெரும்பாலும் வெப்பமான பகுதிகளில் பயிரிடப்படுகிறது.

அன்னாசி பழத்தில், வைட்டமின் ஏ, நார்ச்சத்து, பொட்டாசியம், பாஸ்பரஸ் மற்றும் கால்சியம் போன்றவையும் ஏராளமாக உள்ளன. இது, இனிப்பு, புளிப்பு என, இரு சுவைகளும் கலந்தது.

அன்னாசியில் உள்ள வைட்டமின் சி, உடலின் நோயெதிர்ப்பு சக்தியை வலிமையாக்கும். இதனால், உடலில் நோய்களின் தாக்கம் குறையும்.

செரிமான பிரச்னை இருப்பவர்கள், ஒரு கப் அன்னாசி பழத்தை சாப்பிட்டால், உடனே செரிமான பிரச்னை நீங்கும்.

அன்னாசியில் வைட்டமின் சி, புரோமெலைன் போன்றவை அதிகம் இருப்பதால், இவை நுண்ணுயிர் தொற்றுகளை எதிர்த்துப் போராடும். அதிலும், சளி, இருமல் போன்றவற்றின் போது அன்னாசி பழம் சாப்பிட்டால், நல்ல நிவாரணம் கிடைக்கும்.

அன்னாசி பழத்தில் மாங்கனீசு அதிகம் இருப்பதால், அவை எலும்புகளை வலிமையாக்குவதோடு, இணைப்புத் திசுக்களையும் வலிமையாக்கும். ஒரு கப் அன்னாசி பழத்தில், ஒரு நாளைக்கு தேவையான 73 சதவிகிதம் மாங்கனீசு நிறைந்துள்ளது.

உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்கள் சாப்பிடக்கூடிய பழங்களில் ஒன்று, அன்னாசி. இது, உடலில் உள்ள கொழுப்பின் அளவைக் குறைக்க உதவுகிறது. இதில் உள்ள ப்ரோமெலைன், உடல் எடை மற்றும் தொப்பையைக் குறைக்க உதவுகிறது.

அன்னாசி பழம் சாப்பிட்டால், ஈறுகள் வலிமையடைவதோடு, பற்களும் வலிமையாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கும். மேலும், பித்தக் கோளாறுகள் விரைந்து குணமாகும்.

இன்றையக் கால தலைமுறையினருக்கு, விரைவிலேயே பார்வைக் கோளாறு ஏற்படுகிறது. அன்னாசியில் உள்ள பீட்டா-கரோட்டீன், பார்வையை மேம்படுத்தி, மாஸ்குலர் திசு செயலிழப்பு ஏற்படுவதைத் தடுத்து, கண் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். மேலும், கண் புரையையும் தடுக்கும். எனவே, தினமும் சிறிது அன்னாசி பழத்தை சாப்பிடுவது நல்லது.

அன்னாசி பழத்தில் நோயெதிர்ப்பு அழற்சி தன்மை இருப்பதால், இதனை ஆர்த்ரிடிஸ் நோயாளிகள் உட்கொண்டு வந்தால், மூட்டுகளில் உள்ள வீக்கம் குறைந்து, மூட்டுகள் வலிமையடையும். மேலும், மூட்டு தேய்மானம், ரத்தக் கட்டிகள் சரியாகும்.

சைனஸ், தொண்டைப்புண் போன்றவற்றை குணமாக்கும் சக்தி, அன்னாசி பழத்திற்கு உள்ளது. இதற்கு, அதில் நிறைந்துள்ள புரோமெலைன் தான் காரணம்.

அன்னாசி பழத்தில் ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் அளவுக்கு அதிகமாக உள்ளன. இதனால், ப்ரீ-ராடிக்கல்களால் சரும செல்கள் பாதிக்கப்படுவது தடுக்கப்பட்டு, அதன் மூலம் புற்றுநோய் உருவாவதும் தடுக்கப்படும்.

அன்னாசி பழத்தில் இருக்கும் ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள், ப்ரீ-ராடிக்கல்களால் உண்டாகும் பெருந்தமனி தடிப்பையும் தடுக்கும்.

அன்னாசி பழம், உடலில் உள்ள கொலஸ்ட்ரால் அளவைக் குறைத்து, அதனால் இதய நோய் வருவதைத் தடுத்து, இதயத்தின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும்.

அன்னாசி பழத்தில் உள்ள நோயெதிர்ப்பு அழற்சி தன்மையால், மூச்சுக்குழாயில் ஏற்பட்டுள்ள வீக்கம், காயம் போன்றவை குறைந்துவிடும்.

உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள், அன்னாசியை டயட்டில் சேர்த்து வந்தால், அதில் உள்ள அதிகப்படியான பொட்டாசியம் மற்றும் குறைவான சோடியத்தால், இரத்த அழுத்தம் சீராக பராமரிக்கப்படும்.

அன்னாசி பழத்தில் செரிமான நொதியான ப்ரோமெலைன் உள்ளது. எனவே, அன்னாசியை டயட்டில் சேர்க்கும் போது, அது வயிற்றில் உள்ள புழுக்களை அழித்து வெளியேற்றிவிடும்.

அன்னாசி பழத்தை சாப்பிட்டு வருவதன் மூலம், இரத்தத்தில் உள்ள நச்சுக்கள் அனைத்தும் வெளியேற்றப்பட்டு, இரத்தம் சுத்தமாகும்.

அன்னாசி பழத்தில் உள்ள தயாமின் மற்றும் வைட்டமின் பி, சோர்வை போக்கி, உடலுக்கு ஆற்றலைத் தரும்.

அன்னாசி பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வர, பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப்படுதல் குணமாகும். இதை, தொடர்ந்து ஜூஸாகவும் குடித்து வர, ஆண்களின் முக அழகு பொலிவு பெரும். அன்னாசியில் உள்ள வைட்டமின் சி, புண்கள் மற்றும் காயங்களை, விரைவாக குணப்படுத்த உதவுகிறது.

இத்தனைப் பயன்களை உடையதாக அன்னாசி பழம் இருந்தாலும், இது, கர்ப்பிணிகளுக்கு நல்லதல்ல. ஏனென்றால், இது உடலின் வெப்பநிலையை அதிகரித்து, கருச்சிதைவிற்கு வழிவகுக்கும்

பார்க்க ரசிக்க

சினிமா படங்கள் குறும்படங்கள் ஆல்பம் பாடல்கள் சினிமா பாடல்கள்

சினிமா ஆடியோ விழாக்கள்

பிரபலங்களின் பேட்டிகள் மற்றும் பல நிகழ்ச்சிகள் காண

அச்சாரம் tv @ SKRN MEDIA (you tube channel)








SUBSCRIBE LIKE SHARE

செய்தி:

# முடிதிருத்தகத்தில் ஒரு நூலகம்!

- பாப்பனப்பட்டு வ.முருகன்

டீக்கடைக்கு அடுத்தபடியாக அதிகளவில் அரசியல் பேசப்படும் இடம், சலூன். அந்த அரசியலுக்கு நடுவே, புத்தகங்களையும் புகுத்திவருகிறார், தூத்துக்குடி மாவட்டம், மில்லர்புரத்தைச் சேர்ந்த பொன்.மாரியப்பன்.

பல ஆண்டுகளாக சலூன் கடை நடத்தி வரும் இவர், 2014-ம் ஆண்டிலிருந்து, தனது கடையில் சிறிய நூலகத்தை உருவாக்கி, தன் வாடிக்கையாளர்-களுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி வருகிறார்.

தூத்துக்குடி மில்லர்புரத்தில், சுஷீல்குமார் பியூட்டி கேர்' என்ற சலூன் கடையை நடத்தி வரும் பொன்.மாரியப்பன், வெறும் முடிதிருத்துவதோடு நிற்காமல், வாசிப்புப் புரட்சியைத் தொடங்கியிருக்கிறார்.

இவரது கடையில், தினசரி பத்திரிகைகள், பருவ இதழ்களுக்கு மத்தியில், 3000-க்கும் மேற்பட்ட புத்தகங்கள் அடங்கிய, நூலகம் ஒன்றும் அமைந்துள்ளது.

கதை, கவிதை, வரலாறு, இலக்கியம், ஆன்மிகம், நாவல் என, பலதரப்பட்ட புத்தகங்கள் மர அலமாரியில் வரிசையாக அடுக்கப்பட்டுள்ளன.

முடிவெட்டக் காத்திருக்கும் வாடிக்கையாளர்கள், செல்போனை மறந்து, புத்தகங்களை ஆர்வமாக வாசிக்கின்றனர்.

சிறு வயதிலிருந்தே வாசிப்பு ஆர்வம் கொண்ட மாரியப்பன், 8-ம் வகுப்பு வரை படித்தவர். வக்கீல் அலுவலகத்தில் பணியாற்றிய பின், தந்தையின் முடிதிருத்தும் தொழிலைத் தொடர்ந்து வருகிறார்.

கடையில் வாடிக்கையாளர்கள் இல்லாத நேரத்தில், தான் படித்த புத்தகங்களை அலமாரியில் அடுக்கத் தொடங்கி, இன்று அது ஒரு சிறிய நூலகமாக உருவெடுத்துள்ளது.

"முடிவெட்ட வருபவர்கள் செல்போனில் மூழ்காமல், புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்று விரும்பினேன்... அதற்காகவே சலூன் நூலகம் அமைத்தேன்..." என்கிறார், மாரியப்பன்.

இவரது முயற்சியைப் பாராட்டி, எழுத்தாளர் எஸ்.ராமகிரு'ணன் பரிந்துரையில், புத்தகர் விருது' வழங்கப்பட்டுள்ளது.

இவரின் முயற்சியைப் பாராட்டி, பிரதமர் நரேந்திர மோடி, "மனதின் குரல்" நிகழ்ச்சியில், இவரைப் பற்றி பேசியுள்ளார். அதன்பிறகு, டெல்லியில்




நடந்த, "மனதின் குரல்" நிகழ்ச்சியின் 100-வது நாள் நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டு, கவுரவிக்கப்பட்டார்.

2023-ம் வருஷம், டெல்லியில் நடந்த குடியரசு தின விழாவுக்கு, இவருக்கு அழைப்பு வந்து, சென்று கலந்து கொண்டுள்ளார்.

இந்த நிகழ்வுகளுக்குப் பிறகு, ஏராளமான பதிப்பகங்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள், இவருக்குப் பாராட்டு தெரிவித்ததுடன், இவரின் சலூன் லைப்ரரிக்கு, ஏராளமான புத்தகங்களையும் அன்பளிப்பாக தர ஆரம்பித்துள்ளார்கள்.

தூத்துக்குடி எம்.பி. கனிமொழி, கடையின் நூலகத்தைப் பாராட்டி, 50 புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இவரைப் பற்றி அறிந்த நடிகர் கமல்ஹாசனும், இவருக்கு புத்தக நன்கொடை வழங்கியுள்ளார்.

முடிதிருத்தும் கட்டணம் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து கொண்டு செல்லும் போதும், ஒரு ரூபாய் கூட கட்டணத்தை உயர்த்தியதில்லை மாரியப்பன்.

இந்த ஆண்டு உயர்த்தச் சொல்லி மற்ற கடைக்காரர்கள் வற்புறுத்தியதால், நீண்ட யோசனைக்குப் பின், 50 ரூபாயாக இருந்த கட்டணத்தை, 80 ரூபாயாக உயர்த்தி அறிவித்திருக்கிறார்.

இந்த நிலையில், புதிய அறிவிப்பு ஒன்றையும் பொன் மாரியப்பன் வெளியிட்டுள்ளார். அதாவது,



வரும் ஜனவரி ஒன்றாம் தேதி முதல் முடி வெட்டும் கட்டணம் ரூபாய் 80 ஆக உயர்த்தப்படுகிறது முடிவெட்ட வருகிறவர்கள் இங்குள்ள ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்து பத்து பக்கங்களுக்கு மேல் வாசித்தால், அவருக்கு 30 ரூபாய் கட்டணச் சலுகை வழங்கப்படும்!" - இதுதான் அந்த அறிவிப்பு.

கட்டணத்தைக் கூட்டிச் சொல்லி, புத்தகம் வாசிச்சா 30 ரூபாய் குறைப்புன்னு சொல்றது... எப்படிப் பார்த்தாலும் அதே 50 ரூபாய் கட்டணம் தானே உனக்குக் கிடைக்குது" என்று, மாரியப்பனிடம் மற்ற கடைக்காரர்கள் கேட்கிறார்கள்.

அவர்கள் அப்படி கேட்டாலும், தன் அறிவிப்பிலிருந்து பின்வாங்காத மாரியப்பனின் முயற்சி, வாசிப்பின் மீதான அவரது அன்பையும், சமூகத்திற்கு அவர் ஆற்றும் பங்களிப்பையும் பறைசாற்றுகிறது.

வழக்கமாக முடிதிருத்தும் கடைக்குச் செல்கிறவர்கள், செய்தித்தாள்களை வாசிப்பதைத் தான் பார்த்திருக்கிறோம். ஆனால், பொன்மாரியப்பன் கடைக்குச் செல்கிறவர்கள், ஏதாவது ஒரு புத்தகத்தைப் படிப்பதைக் காண முடிகிறது.

இந்த முடிதிருத்தகம், முடியை மட்டுமல்ல, மூளையையும் புதுப்பிக்கிறது.

இவரைப் போலவே, புதுக்கோட்டை அருகே, தமிழ்வரதன் என்ற இளைஞர், தான் நடத்தும் சலூனில், எல்லா இலக்கிய இதழ்களையும் வாங்கி வாசிக்கப் போட்டிருப்பதுடன், புத்தக வாசிப்பில் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார்.

அவரும் சிறந்த நூல்களைக் கொண்ட புத்தக அலமாரியை உருவாக்கி வைத்து, சேவை செய்து வருகிறார்.

இது போல, ஊருக்கு நாலு சலூன் இருந்தால் போதும், வாசிப்பு பழக்கம் வளமாக வளரும் என்பதில் ஐயமில்லை.

## தேடிவந்த தேவதை

கற்பகிரக தெய்வமாய்
கருவறை சுவாசமானவள்...
பொதிகைத் தென்றலாய்
பரிசமென வந்தவள்...
பூக்களின் இளவரசியாய்
பூர்வஜென்ம புண்ணியமவள்...
உயிரின் உயிராய்
உணர்வாய் உதித்தவள்...
சகாராவின் சிரபுஞ்சியாய்
சாய்ந்தாடும் பேரழகானவள்...
முத்தமிழின் முகவரியாய்
முத்தக்கனியின் பித்தேற்றியவள்...
தூண்டா மணிவிளக்காய்
இல்லத்தின் ஒளிவிளக்கானவள்...
புன்னகையின் முழுமதியாய்
பூவுலகின் பொன்மகளவள்...
வாழ்வின் பொருளாய்
வசந்தத்தின் வனப்பானவள்...
ஆழ்கடலின் முத்தாய்
ஆசையின் சொத்தானவள்...
சாபத்தின் வரமாய்
சந்தோசத்தின் சங்கீதமானவள்...
அன்பின் அமுதாய்ஆறுதல் மொழியானவள்...
தித்திக்கும் தேன்னமுதாய்
செவ்விதழ் பதிப்பவள்...
ஆனந்தத்தின் ஊற்றாய்
அகிலத்தை ஆழ்பவள்...
இன்பத்தின் இசையாய்,¡
இணயற்ற பேரன்பானவள்...
தத்தித் தவழும்
தங்க தாரகையவள்...
குடும்பத்தின் கற்பகத்தருவாய்
காயகல்பமென வந்தவள்...
கிள்ளை மொழியாய்
கொள்ளை கொண்டவள்...
ஒப்பில்லா திரவியமாய்
திகழ்ந்திடும் பொக்கி'மானவள்...
மாசற்ற மாணிக்கமாய்
மரகத வீணையானவள்...
தந்தையின் இதய சிம்மாசனமாய்
கொலுவிருப்பவள்...
கார் முகிலாய்
காயங்கள் ஆற்றுபவள்...
பெண் மகவாய்
தேடிவந்த தேவதையவள்...

- கவிஞர் கா.கலைச்செல்வி,
திருச்செங்கோடு

## திருக்குறல் திரைவிமர்சனம்

பெருந்தலைவர் காமராஜரின் வாழ்க்கை வரலாறான காமராஜ்“ படத்தை இயக்கிய பாலகிருஷ்‘ணன் இயக்கத்தில் சோழன், குணாபாபு, சுப்ரமணியம் சிவா, ஓ ஏ கே சுந்தர், கொட்டாச்சி, தனலட்சும், பாடினி குமார் மற்றும் பலர் நடித்து ஜுன் 27ல் வெளியாகும் படம் திருக்குறல்.

கதை

திருவள்ளுவர் வாழ்ந்த கால கட்டத்தில் நிகழ்ந்த கதையை படமாக உருவாக்கியிருக்கிறார் இயக்குநர் பாலகிருஷ‘ணன். திருக்குறளை எழுதுவதற்கான பின்புலம் அப்போது வாழ்ந்த தமிழ் மக்களின் கலாசாரம், சில குறள் எழுதுவதற்கான சூழல் எப்படி ஏற்பட்டது, குறள்கள் தோன்றிய வரலாறு, இந்தக் காலகட்டத்தில் எந்தெந்த மன்னர்களின் பங்களிப்பு இருந்திருக்கிறது, சம்பந்தப்பட்ட மன்னர்கள் யார் யார், இப்படி பல விஷயங்களையும் பேசியிருக்கும் படம் காதலையும் கலந்து சுவராஸ்யமாக சொல்லியிருக்கும் படம் “திருக்குறள் பாண்டிய மன்னர் ஆட்சிக் காலத்தில்தான் திருக்குறள் அரங்கேறியது. அந்த அரங்கேற்றம் நடப்பதற்கு முன்னால், நக்கீரர் தடுப்பார். “இந்தப் பாடல்கள் நாலடியில் இருக்க வேண்டும். ஆனால், ஒவ்வொரு குறளும் ஒன்றே முக்கால் அடிதான் இருக்கிறது“ என வாதிடுவார். ஆனால் பாண்டிய மன்னன்தான் குறளின் பொருள் உணர்ந்து அதை அரங்கேற்றுவார். இதுபோன்ற காட்சிகள் ரசனையாக சொல்லியிருக்கிறார் இயக்குநர்.

வள்ளுவராகச் சோழன் அவரது மனைவி வாசுகியாக தனலட்சுமி, புலவர் பெருந்தலைச்சாத்தனாக கொட்டாச்சி, பரிதியாக குணாபாபு இவரது காதலியாக பாடினி குமார் நக்கீரராக இயக்குநர் சுப்ரமணிய சிவா, பாண்டிய மன்னராக ஓ.ஏ.கே சுந்தர் என இதில் நடித்த அனைவரும் அவரவர் கதாபாத்திரம் உணர்ந்து சிறப்பாக நடித்திருக்கிறார்கள். இளையராஜாவின் இசையில் பாடல்களும் பிண்ணனி இசையும் ரசிக்கவைக்கிறது. எட்வினின் சகாயின் ஒளிப்பதிவு படத்திற்கு பெரிய பலம். கலை இயக்குநராக சுரே‘ கலேரியும், ஆடைவடிவமைப்பாளராக சுரே‘ குமாரும் நன்றாக பணியாற்றியுள்ளனர். செம்பூர்.கே.ஜெயராஜ்




கதை, திரைக்கதை, வசனம் அருமை.

பெருந்தலைவர் காமராஜர் வாழ்க்கை வரலாற்றை காமராஜ்’ என்ற பெயரிலும், காந்தியின் வாழ்க்கை வரலாற்றை ” Welcome Back Gandhi " என்ற பெயரிலும் திரைப் படமாகத் தயாரித்த ரமணா கம்யூனிகேஷன்ஸ்’ நிறுவனம், தற்போது திருக்குறளை வைத்து மிகப் பிரம்மாண்டமாகத் ஷதிருக்குறள்’ என்ற திரைப்படத்தை மக்களுக்காக கொடுத்துள்ளார்கள். அவசியம் பாருங்கள்.

## மார்கன் திரைவிமர்சனம்




தெகிடி, முண்டாசுப்பட்டி உள்ளிட்டபல படங்களுக்கு படத்தொகுப்பாளராக பணியாற்றிய லியோ ஜான்பால் மார்கன் படத்தின் மூலம் இயக்குநர் அவதாரம் எடுத்துள்ளர். படத்தை தயாரித்தது மட்டுமல்லாமல் விஜய் ஆண்டனி கதையின் ஒரு நாயகனாகவும் நடித்துள்ளார். க்ரைம் இன்வெஸ்டிகேஷன் படமாக உருவாகியுள்ள இந்த படத்தில் மற்றொரு முக்கிய கதா பாத்திரத்தில் அறிமுகமாகியுள்ளார் நடிகர் அஜய் தீ‘ஷன். இவர்கள் மட்டுமல்லாமல் சமுத்திரக்கனி, பிரிஜிதா, தீபீகா, மகாநதி ஷங்கர், வினோத் சாகர்

மற்றும் பலர் நடித்து வெளியாகியிருக்கும் படம் மார்கன்.

கதை

பட ஒப்பனிங்கில் காதலியின் பிறந்தநாளை சந்தோஷமாக கொண்டாடி விட்டு காதலியை இரவு நேரத்தில் அவர் வீட்டு அருகே விட்டுவிட்டு புறப்படுகிறார். காதலி வீட்டுக்கு சென்று கொணடிருக்கும்போது மர்மமான மனிதன் பாலோ செய்து அந்த பெண்ணை இன்ஜக்ஷன் போட்டு கொன்று குப்பைதோட்டியில்போட்டுவிட்டு சென்று விடுகிறான். அந்த தகவல் போலிஸ்க்கு சென்ன்று சம்பவ இடத்திற்கு போலிஸ் வந்து பார்த்துவிட்டு கொலைகாரன் யார் என்ற விசாரனையை தொடங்குகின்றனர். இந்த செய்தியை பாம்பேயில் இருக்கும் விஜய் ஆண்டனிக்கு பத்திரிக்கை மூலம் தெரியவர தன் மகளுக்கு விஷ ஊசி போட்டு கருப்பாக்கி கொலை செய்ததுபோல் இந்த கோலையும் நடந்துள்ளது என உணர்ந்து விஜய் ஆண்டனி அன் அபிசியலாக இந்த வழக்கை விசாரிக்க சென்னை வர, அங்கு தமிழறிவு என்ற ஒருவரை சந்தேகத்தின் பெயரில் பிடித்து விசாரணை செய்கிறார். அவரும் விஜய் ஆண்டனி சந்தேகப்பட்டது போலவே அனைத்தையும் செய்ய, அந்த நபருக்கு எதை பார்த்தாலும் அப்படியே நியாபகம் வைத்துக் கொள்ளும் திறமை இருக்க, பிறகு தான் தெரிகிறது அந்த கொலையை அவர் செய்யவில்லை என்று. பிறகு தமிழறிவு உதவியுடன் அந்த கொலைக்காரனை விஜய் ஆண்டனி கண்டுப் பிடித்தாரா? இல்லையா? என்பதே படத்தின் மீதிக்கதை.

படம் முழுவதும் ஒருகொலை கேஸை கண்டுப்பிடிக்கும் காவல்துறை அதிகாரியாக விஜய் ஆண்டனி சிறப்பாக நடித்துள்ளார்

அறிமுகம் நடிகர் தமிழறிவாக வரும் அஜய், விஜய் ஆண்டனிக்கு நிகரான கதாபாத்திரம், அதை சிறப்பாக செய்துள்ளார்.சமுத்திரக்கனி, பிரிஜிதா, தீப்சிகா, மகாநதி ஷங்கர், வினோத் சாகர் என இதில் நடித்திருக்கும் அனைவரும் அவரவர் கதாபாத்திரம் உணர்ந்து சிறப்பாக நடித்துள்ளனர். விஜய் ஆண்டனியில் இசையில் பாடல்களும் பிண்ணனி இசையும் அருமை. யுவாவின் ஒளிப்பதிவு பஞுத்திறாகு பெரிய பலம்.

தொடர் கொலைகள், அதுவும் ஒரே பேட்டர்ன் யார் செய்திருப்பார்கள்? என பல சுவார்ஸ்யத்துடன் எல்லோரும் ரசிக்குமபடி சுவையாக சொல்லியுள்ளார் இயக்குநர் லியோ ஜான்பால். பாராட்டுக்கள்

மொத்தத்தில் மார்கன் திரில்லர் ரசிகர்களுக்கு நல்ல விருந்து



**வேரூஸ் புரொடக்'ன்ஸ் வழங்கும் இயக்குநர் சூரியபிரதாப் இயக்கும் புதிய திரைப்படத்தில் நடிகர் கவுதம் ராம் கார்த்திக் முக்கிய கதாபாத்திரத்தில் இணைந்தார்!**

தனித்துவமான, உள்ளடக்கம் சார்ந்த கதைகளை தேர்ந்தெடுத்து, பல அடுக்குகளுடன் கூடிய கதாநாயகன் கதாபாத்திரங்களில் திறமையை வெளிக்கொணர்ந்து வருகிற நடிகர் கவுதம் ராம் கார்த்திக், தற்போது வேரூஸ் புரொடக்'ன்ஸ் நிறுவனம் தயாரிக்கும் புதிய திரைப்படத்தில் கமிட் ஆகியுள்ளார்.

தனி'தன் பெர்னாண்டோ, ராஜராஜன் கணநாசம்பந்தம், சஞ்சய் சங்கர் மற்றும் ஂக் முஜீப் ஆகியோரால் தயாரிக்கப்படும் இந்த திரைப்படம், நாளைய இயக்குநர் சீசன் 1" மூலம் அறிமுகமான இயக்குநர் சூரியபிரதாப் எஸ் இயக்கத்தில் உருவாகவிருக்கிறது. இவர், சௌந்தர்யா ரஜினிகாந்த் இயக்கிய ஷகோச்சடையான்' படத்தில் அசோசியேட் டைரக்டர் ஆக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பெயரிடப்படாத திரைப்படம் ஒரு சயின்ஸ் ∴பிக்'ன் கிரைம் த்ரில்லர் ஆக உருவாகவிருக்கிறது. இதில் கவுதம் ராம் கார்த்திக், ஒரு போலீஸ் அதிகாரியாக முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவிருக்கிறார்.

வேரூஸ் புரொடக்ஷன்ஸ் நிறுவனம் கூறியதாவது, நாங்கள் வேரூஸ் புரொடக்'ன்ஸ் நிறுவத்தை தொடங்கிய முக்கிய நோக்கம் □ நம்முடைய ஆர்வத்தையும் அனுபவத்தையும் கொண்டு தரமான கற்பனைதிறன் கொண்ட உள்ளடக்கங்களை உருவாக்குவதே. படங்கள், டிஜிட்டல் மற்றும் இசை துறைகளில் நாங்கள் முன்னதாகவே வெற்றிகரமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம், குறிப்பாக அண்மையில் வெளியான நம்முடைய We Call Him Dhoni| பெரும் வரவேற்பைப் பெற்றது.

தமிழ்சினிமா எப்போதும் உலக அளவில் பார்வையாளர்களை ஈர்க்கும் தனித்துவமான கதை சொல்லும் பாணியைக் கொண்டுள்ளது. இயக்குநர் சூரியபிரதாப் இந்த கதையை விவரிக்கும்போது, அவர் உணர்வுகளை நேரடியாக பார்வையாளர்களிடம் கொண்டு சேர்க்கும் திறனை உணர்ந்தேன்.

சிறுகதை

## ஆனந்த வெளிச்சம்!

- மு.நந்தனா

சென்னையின் புறநகர்ப் பகுதியில், புழுதி படர்ந்த குறுகிய வீதியில், காலைப் பொழுது மெல்ல விடிந்து கொண்டிருந்தது.

வானம் மஞ்சள்-ஆரஞ்சு நிறத்தில் கதிரவனின் முதல் கிரணங்களால் ஒளிர்ந்தது. பறவைகளின் கீச்சிடும் ஒலி, தூரத்தில் ஓடும் வாகனங்களின் இரைச்சலுடன் கலந்து, அந்த சிறிய வாடகை வீட்டின் ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப்பார்த்தது.

வசந்தி, முப்பது வயதைக் கடந்த ஒரு தன்னம்பிக்கை நிறைந்த பெண். தன் ஆறு வயது மகன் அரவிந்தை பள்ளிக்கு தயார்படுத்திக் கொண்டிருந்தாள். அவளது கைகள் வேகமாக இயங்கினாலும், அவள் முகத்தில் ஒரு மென்மையான புன்னகை மலர்ந்திருந்தது.

அரவிந்தின் கண்கள், கருமை நிறைந்த பளபளப்புடன், உற்சாகத்தில் மின்னின. அம்மா, இன்னிக்கு ஸ்கூல்ல டிராமா போடுறோம்! நான் ராஜாவா நடிக்கப் போறேன்!" என்று கூறி, தன் சிறிய கைகளால் அவள் கைகளை இறுகப் பற்றினான்.

வசந்தி அவனைப் பார்த்து சிரித்தாள். ராஜா மாதிரி பிரமாதமா நடி, அரவிந்து! உனக்கு அந்த கிரீடம் செம்மையா இருக்கும்!" என்று கூறி, அவன் கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டாள்.

ஆனால், அவள் மனதில் ஒரு மூலையில், கடந்த காலத்தின் கனமான நினைவுகள் தலை தூக்கின. அந்த நினைவுகள், மறையாத காயங்களைப் போல, அவளை அவ்வப்போது தொட்டு எழுப்பின.

எட்டு வருடங்களுக்கு முன்பு, வசந்தியின் வாழ்க்கை வேறு விதமாக இருந்தது. கல்லூரியில் படிக்கும் போது, மகே' என்ற இளைஞனின் கனவுகளில் தோய்ந்து, அவனது அன்பில் திளைத்திருந்தாள்.

மகேஷ்', உயரமான, அமைதியான புன்னகையுடன், எப்போதும் எதிர்காலத்தைப் பற்றி பேசுவான்.

வசந்தி, நாம ஒரு சின்ன வீடு வாங்குவோம். ஒரு தோட்டம், ஒரு மரநாற்காலி, நம்ம பையன் அங்க ஓடி விளையாடுவான்!" என்று கனவு காண்பான்.

அவனது குரல், அவளுக்கு எப்போதும் ஒரு பாதுகாப்பு உணர்வை அளித்தது.



ஆனால், அவர்களின் காதல் இரு குடும்பங்களின் எதிர்ப்பைச் சந்தித்தது. நம்ம குடும்பத்துக்கு ஏத்தவ இவ இல்லை!" என்று மகேஷின் பெற்றோர் மறுத்தனர்.

வசந்தியின் பெற்றோரும், இந்தக் காதல் எல்லாம் நம்ம சமூகத்துக்கு ஒத்து வராது!" என்று மறுத்தனர். ஆனால், காதல் வென்றது. இருவரும், உறவுகளை மீறி, ஒரு எளிய பதிவுத் திருமணம் செய்து கொண்டனர்.

திருமணமாகி இரண்டு வருடங்கள் மகிழ்ச்சியாகக் கழிந்தன. அரவிந்த் பிறந்தான். அவனது முதல் அழுகை, மகேஷின் முகத்தில் ஒரு புன்னகையை வரவழைத்தது. இவன் நம்ம ராஜா, வசந்தி!" என்று அவன் சிரித்தபடி கூறியது இன்னும் வசந்தியின் காதுகளில் ஒலித்தது. ஆனால், விதி கொடூரமாகத் தாக்கியது.

ஒரு மழை நிறைந்த இரவில், மகேஷ்' வேலை முடிந்து வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தபோது, ஒரு விபத்தில் உயிரிழந்தான். அந்த செய்தி வசந்தியை உடைத்து விட்டது. அவள் மனம், ஒரு புயலில் சிக்கிய படகு போல, அலைந்தது. என்னை விட்டுட்டு எப்படி போய்ட்ட, மகேஷ்'?" என்று அவள் கண்ணீருடன் கேட்டபோது, பதில் இல்லை.

அரவிந்த், ஒரு வயதுக் குழந்தையாக, அவள் கைகளில் அழுது கொண்டிருந்தான். மகேஷின் மறைவு, வசந்தியை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் உலுக்கியது. ஆனால், உண்மையான சோதனை அதற்குப் பிறகுதான் தொடங்கியது.

மகேஷின் பெற்றோர், ராமசாமியும் சாரதாவும், வசந்தியை குற்றம் சாட்டினர். நீயும் உன் காதலும்தான் எங்க மகனை அழிச்சது!" என்று ராமசாமி கத்தினார்.


அவர் குரலில் கோபமும், வெறுப்பும் தொனித்தது. சாரதா, மேலும் கடுமையாக இருந்தார். இவ மகேனை‘ மயக்கி, நம்ம குடும்பத்தை அழிச்சுட்டா! இவளை இங்க வச்சிருக்க முடியாது!” என்று கூறி, வசந்தியை வீட்டு வேலைகளில் அலைக்கழித்தார். அரவிந்தின் அழுகை கேட்டாலும், குழந்தையை அமைதியா வை! இங்க யாருக்கு நேரம் இருக்கு இதுக்கு?” என்று கத்துவார்.
ஒரு இரவு, சாரதாவின் பொறுமை உடைந்தது. இவளை இந்த வீட்டுல வச்சிருக்க முடியாது! விரட்டிவிடுங்க!” என்று கத்தி, வசந்தியை வீட்டை விட்டு துரத்தினார். வசந்தி, அரவிந்தை மார்போடு அணைத்தபடி, இரவின் குளிரில் தெருவில் நின்றாள். அவள் கண்களில் கண்ணீர், ஆனால் மனதில் ஒரு உறுதி. □நான் தோற்க மாட்டேன்,” என்று அவள் மனம் உரத்து கூறியது.
வசந்தி தன் பெற்றோர் வீட்டுக்கு திரும்ப முயன்றாள். ஆனால், □காதல் திருமணம் செய்தவளை எப்படி ஏற்பது?” என்று அவர்கள் மறுத்து விட்டனர். உறவுகள் அனைத்தும் அவளை கைவிட்டன. ஆனால், வசந்தியின் மனம் உடையவில்லை.
வசந்தி, தன் கல்லூரிப் படிப்பை முடித்திருந்தவள். ஒரு சிறிய நிறுவனத்தில் எழுத்தராக வேலைக்குச் சேர்ந்தாள். அரவிந்தை பகல்நேர பராமரிப்பு மையத்தில் விட்டு, இரவு நேர வகுப்புகளில் சேர்ந்து, மேலாண்மை படிப்பை முடித்தாள். இரவு முழுவதும் படித்து, பகலில் வேலை செய்து, அவள் உடல் களைத்தாலும், மனம் உறுதியாக இருந்தது. என் மகனுக்கு ஒரு நல்ல வாழ்க்கை கொடுப்பேன்,” என்று அவள் உறுதி எடுத்திருந்தாள். அவளது உழைப்பு வீண்போகவில்லை. சிறிய நிறுவனத்தில் ஆரம்பித்தவள், படிப்படியாக முன்னேறி, இப்போது ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் மனிதவள மேலாளராகப் பணிபுரிந்தாள்.
அரவிந்துக்கு நல்ல கல்வி, வசதியான வாழ்க்கை அளித்து, அவனை ஒரு நல்ல மனிதனாக வளர்த்து வந்தாள். ஆனால், கடந்த காலத்தின் காயங்கள் மறையவில்லை. மாமனார், மாமியாரின் கொடுமைகள், அவளை துரத்திய அந்த இரவு, இவை எல்லாம் அவள் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தன.
ஒரு ஞாயிறு காலை, வசந்தி தன் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னையில் உள்ள ஒரு ஆதரவற்றோர் இல்லத்திற்குச் சென்றிருந்தாள். முதியவர்களுக்கு உணவு, உடைகள் வழங்குவதற்காக அவள் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. அங்கு, முதியவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது, ஒரு மூலையில், மெலிந்த உருவங்களாக, முதுமையில் தளர்ந்து போயிருந்த ராமசாமியையும் சாரதாவையும் பார்த்தாள். அவர்கள் அவளைப் பார்த்ததும், முகத்தில் அதிர்ச்சியும், பயமும் தோன்றியது. ராமசாமியின் கண்கள் கலங்கின.
வசந்தி...” என்று அவர் குரல் நடுங்கியது.
வசந்தி அருகில் சென்று, மென்மையாக, எப்படி இருக்கீங்க?” என்று கேட்டாள்.
ராமசாமி, தயங்கியபடி, வசந்தி, எங்களை மன்னிச்சிடு. உனக்கு நாங்க பண்ணது பெரிய தப்பு. உன் காதல் திருமணத்தை ஏத்துக்க முடியாம, உன்னையும் உன் குழந்தையையும் துரத்தினோம். இப்ப நாங்க இந்த நிலைமையில இருக்கோம். எங்க சொத்து எல்லாம் மோசடியில போயிடுச்சு. இந்த இல்லத்துலதான் கடைசி காலத்தை கழிக்கிறோம்,” என்றார்.
சாரதா, கண்ணீருடன், □எங்களுக்கு ஒரு பேரன் இருக்கான்னு கூட புரிஞ்சுக்காம, உன்னை அநாதையாக்கிட்டோம். இப்ப எங்களுக்கு எதுவும் இல்லை, ஆனா, எங்க சொத்து இன்னும் கொஞ்சம் இருக்கு. அதை உன் மகனுக்கு, எங்க பேரனுக்கு எழுதி வைக்கிறோம்” என்று கெஞ்சினார்.
வசந்தி அமைதியாக அவர்களைப் பார்த்தாள். அவள் மனதில் கோபமோ, வெறுப்போ இல்லை.
நீங்க எனக்கு பண்ணதை மறக்க முடியாது. ஆனா, அதை மன்னிக்க முடியும். உங்க சொத்து என் மகனுக்கு தேவையில்லை. நான் அவனை என் உழைப்புல வளர்த்திருக்கேன். அவனுக்கு நல்ல எதிர்காலம் இருக்கு. உங்க சொத்தை இந்த ஆதரவற்றோர் இல்லத்துக்கு எழுதி வைங்க. இங்க இருக்கிற மனு‘ங்களுக்கு, உங்களை மாதிரி யாரும் இல்லாதவங்களுக்கு, அது பயன்படும்,” என்று உறுதியாகக் கூறினாள்.
வீட்டுக்கு திரும்பியபோது, அரவிந்த் ஓடி வந்து, அம்மா, நான் ராஜாவா நடிச்சேன், எல்லாரும் கை-தட்டினாங்க!” என்று உற்சாகமாகக் கூறினான்.

வசந்தி அவனை அணைத்து, நீ எப்பவுமே அம்மாவோட ராஜா!” என்று சிரித்தாள்.

அவள் மனதில், கடந்த காலத்தின் கவலை நிழல்கள் மறைந்து, அவளுடைய உழைப்பும், அன்பும் உருவாக்கிய ஆனந்த வெளிச்சம் மட்டுமே இருந்தது.

# 2025 ஜூலை மாத ராசி பலன்கள்

## மேஷம்



கடந்த சில மாதங்களாக இருந்த நிலையை விட மேஷ ராசியினருக்கு ஜூலை மாதம் பல வகையில் சாதகமாக இருக்கும். வருமானம் வேலையில் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் கூட அதிகப்படியான செலவு-கள் கடந்த சில வாரங்களாக ஏற்பட்டிருக்கும். செலவுகள் குறைந்து வருமானம் அதிகரிக்கும் காலம். அதேபோல மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். உங்கள் முயற்சிகள் அனைத்துமே கைகூடும் மாதமாக ஜூலை மாதம் இருக்கும். வரும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## ரிஷபம்



ஜூலை மாதம் பெரும்பாலான கிரகங்கள் ரிஷப ராசியினருக்கு சாதகமான இடத்தில் சஞ்சரிப்பதால் கடந்த ஒரு மாத காலமாக இருந்த நெருக்கடிகள் விலகும். குறிப்பாக, திடீர் செலவுகள் விரயங்கள் சேமிப்பு கரைவது உள்ளிட்ட பணம் சம்பந்தப்பட்ட வி'யங்களில் கடந்த சில வாரங்கள் ரிஷ'ப ராசிக்கு போராட்டமாக இருந்திருக்கும். இந்த நிலை மாறி அடுத்தடுத்து, பணவரவு அதிகரித்து வீண் விரயங்கள் குறைந்து கையிருப்பு சேமிப்பு அதிகரிக்கும்.

## மிதுனம்

ஜூலை மாதம் கலவையான மாதமாக இருக்கும். இந்த மாதம் வழக்கத்தைவிட செலவுகள் அதிகரிக்கலாம். குறிப்பாக குழந்தைகளுக்கான செலவுகள் அதிகமாக ஏற்படக்கூடும். அதே நேரத்தில் எதிர்பாராத அளவுக்கு அதிர்'டம் அல்லது பண வரவும் உண்டாகும். தனிப்பட்ட விதத்திலும் குடும்பத்திலும் உங்களுக்கான மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும் மாதமாக இருக்கும். இருப்பினும் பேச்சில் கவனம் தேவை.



## கடகம்



கடக ராசியினருக்கு கடந்த சில மாதங்களுடன் ஒப்பிடும் பொழுது ஜூலை மாதம் நிம்மதி பெருமூச்சு விடும் மாதமாக இருக்கும். வருமானம் அதிகரிக்கும், வீண் செலவுகள் குறையும். இவை எல்லாவற்றையும் விட குடும்பத்தில் இருந்த சின்ன சின்ன மனக்கசப்புகள், சண்டைகள், விவாதங்கள் நீங்கி மனநிம்மதி பிறக்கும்.

## சிம்மம்



இந்த மாதம் உங்களுக்கு பல வி'யங்களில் சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் துறையில் நல்ல வெற்றியைத் தரும். உங்கள் வியாபாரத்தில் நல்ல வெற்றியைக் கொண்டுவரும் காதல் உறவுகளுக்கு அனுகூலமான மாதமாக இருக்கும். உங்கள் திறமையால் நீங்கள் நல்ல வேலைகளைச் செய்யலாம். மாதத்தின் தொடக்கத்தில் சூரியனும் புதனும் சேர்ந்து பத்தாம் வீட்டில் உங்கள் புத்திசாலித் தனத்தையும், திறமையையும் வெளிப்படுத்தும் யோகத்தை அதிகரிக்கும். மாதத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை, செவ்வாய் மற்றும் குருவின் பார்வை உங்கள் ஏழாவது வீட்டில் இருப்பதால். பகவானின் அருளால் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணலாம். மாதத்தின் இரண்டாம் பாதியில் குடும்பத்தில் நல்ல வருமானம் இருக்கும். உடன்பிறந்தவர்களின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும்

## கன்னி



கன்னி ராசிக்காரர்களே! ஜூலை மாதமானது உங்களின் திட்டங்களை செயல்படுத்த சிறந்த மாதமாகும். இந்த மாதத்தில் பணி புரிபவர்களுக்கு பதவி உயர்வு அல்லது சம்பள உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. கூட்டு தொழில் செய்பவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். வீட்டு சூழல் மகிழ்ச்சியாக இருக்கும். ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை, பருவகால நோய்கள் குறித்து சற்று கவனமாக இருக்க வேண்டும்.


## துலாம்

துலாம் ராசிக்காரர்களே! ஜூலை மாதமானது நன்றாக இருக்கும். பணியிடத்தில் உங்களின் முடிவுகள் முக்கியமானதாக இருக்கும். நிதி நிலைமை வழக்கத்தை விட நன்றாக இருக்கும். ஏற்கனவே செய்த முதலீடுகளில் இருந்து நல்ல லாபம் கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளன. குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும். ஆனால் அடிக்கடி கண் பிரச்சனைகள் மற்றும் தலைவலியால் அவதிப்பட நேரிடும்.



## விருச்சிகம்

ஜூலை மாதத்தில் உங்களின் தைரியமும், கடின உழைப்பும் சோதிக்கப்படலாம். இம் மாதத்தில் பணியிடத்தில் உங்கள் எதிரிகள் சுறுசுறுப்பாக இருப்பார்கள். இருப்பினும் புத்திசாலித்தனமாக செயல்பட்டு, உங்கள் எதிரிகளை எளிதில் சமாளிப்பீர்கள். பண விஷயங்களில் இம்மாதத்தில் கவனமாக இருக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்களிடையே வரும் பிரச்சனைகளை பெரிதுபடுத்தாதீர்கள். ஆரோக்கிய விஷயத்தில் சற்று கவனமாக இருங்கள்.



## தனுசு

ஜூலை மாதம் உங்களுக்கு நேர்மறை ஆற்றல் நிறைந்ததாக இருக்கும். தொழில் ரீதியாக முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் கிடைக்கும். வணிகர்களுக்கு நல்ல லாபத்தைத் தரும் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். புதிய வருமான ஆதாரங்கள் உருவாகும். குடும்ப சூழல் மகிழ்ச்சியாக இருக்கும். ஆரோக்கியமும் சிறப்பாக இருக்கும். ஆனால் இம்மாதத்தில் பயணங்களை மேற்கொள்ளும் போது கவனமாக இருக்க வேண்டும்.



## மகரம்

ஜூலை மாதத்தில் உங்கள் வாழ்க்கையில் நல்ல உயரத்தை அடைவீர்கள். உங்களின் முயற்சிகள் நல்ல பாராட்டைப் பெறும். நிதி நிலைமை வலுவாக இருக்கும். தேவையற்ற செலவுகளை செய்வதைத் தவிர்க்க வேண்டும். குடும்ப உறுப்பினர்களுடன் பேசும் போது சற்று பொறுமையாக இருக்க முயற்சிக்க வேண்டும். ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை நன்றாக இருக்க நல்ல நிம்மதியான தூக்கத்தைப் பெற முயற்சி செய்யுங்கள்.



## கும்பம்

ஜூலை மாதத்தில் உங்களின் வேலைகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். அலுவலகத்தில் உங்களின் யோசனைகள் நல்ல பாராட்டைப் பெறும். நல்ல நிதி ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இருந்தாலும் மற்றவர்களுக்கு கடன் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். வீட்டு சூழல் அமைதியாக இருக்கும். ஆரோக்கியம் நன்றாக இருக்க வேண்டுமானால், உணவில் கூடுதல் கவனம் செலுத்துங்கள்.



## மீனம்

ஜூலை மாதம் உங்களுக்கு முன்னேற்றத்தைத் தரும் மாதமாக இருக்கும். பணியிடத்தில் உங்களின் நிலை வலுவடையும். நிதி பரிவர்த்தனைகளால் நிறைய லாபம் கிடைக்கும். அதே சமயம் அதிக செலவுகளையும் சந்திக்க நேரிடும். குடும்ப வாழ்க்கை இனிமையாக இருக்கும். ஆரோக்கியத்தில் சற்று கவனமாக இருக்க வேண்டும். இம்மாதத்தில் தோலை மற்றும் வயிறு தொடர்பான பிரச்சனைகள் தொந்தரவு செய்யக்கூடும்.



## தீபாவளிக்கு வெளியாகும்: லெஜெண்ட் சரவணனின் புதிய படம்



## லவ்மேரேஜ் திரைவிமராசனம்




சண்முகபிரியன் இயக்கத்தில் விக்ரம்பிரபு, சுஷ்'மிதா பட், ரமே'ஷ திலக், சத்யராஜ், ஆருள்தாஸ் மற்றும் பலர் நடித்து வெளியாகியிருக்கும் படம் லவ் மேரேஜ்

கதை

உசிலம்பட்டியில் ஜவுலிக்கடை நடத்திவருகிறார் விக்ரம் பிரபு. இவர் 5 வருடமாக காதலித்த பெண் குடும்ப சூழ்நிலையை சொல்லி வேறொருவ-னை திருமணம் செய்து கொள்கிறார். அந்த விரக்தியில் காலம் சேன்றுவிட வயதும் 33 ஆகிவிடுகிறது. ராசியில்லாதவர் என முத்திரை-ரயும் விழுகிறது. அதனாபின் பல பெண்களை பார்க்க கடைசியாக கோபிசெட்டி பாளையத்தில் உள்ள பெண்ணை பார்த்து நிச்சயமும் செய்கிறார் தன் நண்பர்கள் சொந்த பந்தங்களை அழைத்து சென்று. நிச்சயதார்த்தம் நன்றாக நடந்து முடிய, ஊருக்கு கிளம்பும் வேளையில், அவர்கள் வந்த வண்டியில் கோளாறு ஏற்படுகிறது. இதனால் ஒரு இரவு பெண் வீட்டில் தங்கிவிட்டு, நாளை காலை செல்லலாம் என முடிவு செய்கிறார்கள். ஆனால், அந்த சமயத்தில் கொரோனா தொற்று காரணமாக நாடு முழுவதும் ஊரடங்கு அமலுக்கு வருகிறது. இதனால் மாப்பிள்ளை வீட்டார் அனைவரும் பெண் வீட்டில் தங்கி விடும் சூழல் ஏற்படுகிறது. இந்த சமயத்தில், கட்டிக்கபோகும் பெண்ணிடம் பேசி பழகி நெருக்கமாக வேண்டும் என முயற்சி செய்கிறார் விக்ரம் பிரபு. ஆனால், கதாநாயகியோ வேறு ஒருவரை காதலி-த்து வருகிறார். அவர் வேறொரு சாதி என்பதால் இவர்கள் திருமணத்திற்கு கதாநாயகியின் பெற்றோர் சம்மதிக்கவில்லை. அதற்கு பதிலாக விக்ரம் பிரபுவை தங்கள் மகளுக்கு திருமணம் செய்து வைக்க முடிவு எடுத்துவிட்டனர். இப்படிபட்ட சூழ்நிலையில், ஒரு நாள் தான் காதலித்து வந்தவனுடன் கதாநாயகி ஓடிப்போய் விடுகிறார். இதனால் திருமணம் நின்று போக, கதாநாயகன் விக்ரம் பிரபு அதிர்ச்சியில் மயக்கம் போட்டு விழ, அதன்பின் என்ன நடந்தது என்பதே படத்தின் மீதி கதை..

கதாநாயகன் விக்ரம் பிரபு தனக்கு கொடுத்த கதாபாத்திரத்தை சிறப்பாக செய்துள்ளார். மணப்பெண்ணாக அறிமுக நாயகி சு'ஷமிதா பட் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். சுஷ்'மிதாவின் தங்கையாக வரும் மீனாட்சி தினேஷ்', துறுதுறுப்பான கதாபாத்திரத்தில் முத்திரை பதித்து நம்மை கவர்கிறார் அழகாலும் நடி-ப்பாலும். கஜராஜ், ரமேஷ்' திலக், வடிவேலு, அருள்தாஸ் என இதில் நடித்த அனைவரும் அவரவர் கதாபாத்திரம் உணர்ந்து சிறப்பாக நடித்திருக்கிறார்-கள். இதில் அருள்தாஸ் மட்டுமே ஸ்கோர் செய்கிறார். இரண்டாம் பாதியில் வரும் சத்யராஜின் கேமியோ ரசிக்கவைக்கிறது. 'ான் ரோல்டனின் இசையில் பாடல்களும் பிண்ணனி இசையும் ரசிக்கவைக்கிறது. மதன் கிரிஸ்டோபரின் ஒளிப்பதிவு படத்திற்கு பெரிய பலம்.

திருமணம் ஆகாமல் ஒரு ஆண் படும் வேதனை, இந்த சமூகத்தில் அவனுக்கு எற்படும் அவமானங்களை திரையில் காட்டிய விதம் அருமை. அதே போல் சாதியை காரணமாக வைத்து நடக்காமல் போகும் திருமணங்கள் குறித்து பேசியதற்கு பாராட்டுக்கள். சாதியா இல்லை பெற்ற மகளா என்கிற சூழலில், கதாநாயகியின் தந்தை எனக்கு என் மகள்தான் முக்கியம் என எடுத்த முடிவு நன்றாக இருந்தது.

முதல் பாதியை கலகலபாபாக கோண்டுசென்ற இயக்குநர் சண்முக பிரியன் இரண்டாம் பாதியை இன்னும் கலகலப்பாக சொல்லியிருக்கலாம். பார்க்கலாம் பாராட்டுக்கள்.

உங்கள் அச்சாரம் You Tube Channel ல்

ரசித்து பார்க்க பல குறும்படங்கள்





சொல்லிட்டாளே காதல் கதை குறும்படம்



# செய்திக்கதம்பம்!

- பாப்பனப்பட்டு வ.முருகன்



பூச்சியை அடித்து பார்வையை பறிகொடுத்தவர்!

சீனாவின் தெற்கு மாகாணமான குவாங்டாங்கில் உள்ள, ெ்ன்சென் நகரில் வசித்து வரும், "வூ" என்பவரின் முகத்தில், பூச்சி ஒன்று வெகுநேரமாக வட்டமிட்டபடி தொந்தரவு செய்துள்ளது.

இதனால், ஆத்திரமடைந்த அவர், தனது இடது கண்ணின் மீது அமர்ந்த அப்பூச்சியை பலமாக அடிக்கவே, அவரின் இடது கண்ணில் அடி பலமாக விழுந்துள்ளது.

இதன் காரணமாக, சில மணி நேரத்திற்குப் பிறகு கண்களில் வலி ஏற்பட்டு, கண்கள் சிவக்க ஆரம்பித்துள்ளது.

அச்சமடைந்த அவர், உடனடியாக மருத்துவரை அணுகியுள்ளார். அங்கு இவரை சோதனை செய்த மருத்துவர்கள், இவர், "கான் ஜூன்க்டிவிடிஸ்" எனும் தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, மருத்துவரின் பரிந்துரையின் பேரில் மருத்துகளை உட்கொள்ள ஆரம்பித்துள்ளார். ஆனால், அது அவரின் நோயை கட்டுப் படுத்தவில்லை. மேலும், அவரின் கண்களைச் சுற்றியுள்ள பகுதிகளில், கடுமையான புண்ணும் ஏற்பட்டுள்ளது.

மீண்டும் மருந்துகள் எடுத்த போதும் கூட, அதைக் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு தொற்று அதிகரித்து, கண்பார்வைத் திறன் குறைய தொடங்கியுள்ளது.

இதே நிலை தொடர்ந்தால், இது மூளையையே பாதிக்கும் என்ற காரணத்தால், அவரது இடது கண்ணின் கரு விழியையே அகற்றியுள்ளனர், மருத்துவர்கள்.

**மர்ம சுரங்கப்பாதைக்குள், கிளியோபாட்ராவின் கல்லறையா?**

சில ஆண்டுகளுக்கு முன்பு, பண்டைய எகிப்து ராணி கிளியோபாட்ராவின் கல்லறையைத் தேடும்போது, நிபுணர்கள் ஒரு சுரங்கப்பாதையைக் கண்டுபிடித்தனர்.



எகிப்து கரையில் அமைந்துள்ள, தபோசிரிஸ் மேக்னாவில் இருக்கும் அந்த சுரங்கப்பாதையை ஆய்வு செய்த ஆராய்ச்சியாளர்கள், அது ஒரு மாபெரும் வடிவியல் அதிசயம் என்று தெரிவித்துள்ளனர்.

இந்த ஆய்வுக்கு, சாண்டோ டொமிங்கோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த, கேத்லீன் மார்டினெஸ் தலைமை தாங்கினார். சுமார் 1305 மீட்டர் நீளம் கொண்ட இந்த சுரங்கப்பாதை, கோயிலின் கீழ் அமைந்துள்ளது. மணற்கற்களால் செதுக்கப்பட்டுள்ள இந்த சுரங்கப்பாதை, கிரேக்க தீவான சமோஸில் உள்ள, புகழ்பெற்ற யூபலினோஸ் சுரங்கப்பாதையை ஒத்திருக்கிறது.

யூபலினோஸ் சுரங்கப்பாதை, கி.மு. 6ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இது, அதன் சிறந்த பொறியியல் வடிவமைப்பிற்காக புகழ்பெற்றது.

டபோசிரிஸ் மேக்னா சுரங்கப்பாதை, யூபனாலினோஸின் கட்டுமான அமைப்புகளைக் கொண்டுள்ளதாக, ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், அதன் சில பகுதிகள், யூபனாலினோஸ் சுரங்கப்பாதையை போலவே நீரில் மூழ்கியுள்ளது. ஆனால், இதில் சிக்கல் என்னவென்றால், இந்த சுரங்கப்பாதை உருவாக்கப்பட்டதன் நோக்கம் என்னவென்று தெரியவில்லை.

கடந்த 2004ம் ஆண்டு முதல், கிளியோபாட்ராவின் கல்லறையைத் தேடும் பணிகள் நடைபெற்று வந்தாலும், இந்த சுரங்கப்பாதை ஒரு சிறந்த கண்டுபிடிப்பு என்று, மார்டினெஸ் நம்புகிறார்.

கி.மு 230ல் கட்டப்பட்ட இந்தக் கோயில், கிளியோபாட்ராவுக்கு தொடர்புடைய அசோரிஸ் மற்றும் ஐசிஸ் கடவுள்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோயிலை இன்னும் முழுமையாகக் காண முடியவில்லை. காரணம், அதன் ஒரு பகுதி, மத்திய தரைக் கடலில் உள்ளது. கி.பி. 320 மற்றும் 1303க்கு இடைப்பட்ட காலக்கட்டத்தில், அலைகள் காரணமாக அதன் பெரும்பாலான பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளன.

இந்த சுரங்கப்பாதைகளில், கிளியோ பாட்ராவின் கல்லறை உள்ளதா என்பதைக்

கண்டறிய, மரியாவுட் ஏரிக்கும், மத்தியதரைக் கடலுக்கும் இடையே உள்ள சுரங்கங்ளில், தேடும் பணி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## அண்டார்டிகாவின் மிக உயரமான சிகரத்தில் ஏறி, சாதனை படைத்த வீரர்!



அண்டார்டிகா, பனிக்கட்டியால் மூடப்பட்ட கண்டம். பூமியிலேயே மிகவும் குளிரான பகுதி இதுதான்.

புவியின் தென்முனையில் அமைந்திருப்பதால், இப்பகுதிக்கு சூரியனின் வெப்பம் மிகக் குறைந்த அளவே வந்து சேரும். இதன் காரணமாக, அண்டார்டிகா முழுவதுமே பனிக்கட்டியினால் மூடப்பட்டுள்ளது. ஒரு வருடத்தில் 6 மாதங்கள் சூரியனின் வெளிச்சமே இங்கு இருக்காது.

இங்கே நிரந்தர மக்கள் குடியிருப்பு எதுவும் கிடையாது.வெவ்வேறு உலக நாடுகளின் ஆய்கூடங்கள் மட்டுமே இருக்கின்றன.

அண்டார்டிகாவில், ஏறத்தாழ 5 ஆயிரம் மீட்டர் (16 ஆயிரம் அடி) அளவுக்கு தரையில் ஆழ்துளையிட்டால் தான், மண்ணையே பார்க்க முடியும். ஏனெனில், 98 சதவிகிதம் பனிப்பாறைகளால் மூடப்பட்டுள்ளது.

அண்டார்டிகா, 14.5 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், 5வது பெரிய கண்டமாகவும் திகழ்வதோடு, உலகிலேயே கொடுமையான 89 டிகிரி செல்சியல் குளிர்நிலவும் பகுதியாகவும் விளங்குகுறது.

அண்டார்டிகாவில், எந்தவித உயிரினங்களும் நிலையாக வாழ்வதுமில்லை. துணிச்சலாக சென்ற பல சுற்றுலா பயணிகள், உயிரை இழந்து இருக்கிறார்கள்.

அண்டார்டிகாவில், “வின்சன் மாஸிப்“ என்ற, 4892 மீட்டர் உயரமுள்ள மலைச் சிகரம் உண்டு. ஆனால், அது நமது எவரஸ்ட் சிகரத்தை விட பாதி உயரம் தான். அதே போல் அங்கே, “ரோஸ் ஐலன்ட்“ எனும் தீவில், “மவுண்ட் எருபஸ்“ என்ற எரிமலையும் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அங்கே 70 அழகிய குடிநீர் ஏரிகளும் உள்ளன.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை, ஒரே பனிப்படலமாகக் காட்சியளிக்கும் அண்டார்டிகா, முதலில் பார்ப்பதற்கு மகிழ்ச்சியைத் தந்தாலும், தொடர்ந்து தாங்க முடியாத வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தும். திடீர் திடீரென அண்டார்டி காவில், 300 கிலோ மீட்டர் வேகத்தில் பனிப்புயல் வீசும். அங்கே குளிரால் ஏற்படும் ஆபத்தை விட, பனிப்புயலால் விளையும் ஆபத்தே அதிகம்.இச்சூழலில், கேரளாவைச் சேர்ந்த, 36 வயது நிரம்பிய, ஷேக் ஹசன்கான் என்ற, பல ஆபத்துக்களையும் கடந்து, வின்சன் மாஸிப் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார்.

கேரள மாநில அரசு ஊழியரான இவர், தனது ஓய்வு நாட்களில், உலகின் மிக உயர்ந்த மலை சிகரங்களில் ஏறி சாதனை செய்து வருகிறார். அந்த வகையில், இதற்கு முன்பு, எவரெஸ்ட், தெனாலி (வட அமெரிக்கா), கிளிமாஞ்சாரோ (ஆப்பிரிக்கா), எல்ப்ரஸ் (ஐரோப்பா) ஆகிய சிகரங்களில் ஏறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏலத்துக்கு வரும், டைட்டானிக் மெனு கார்டு!



உலக மக்களின் நினைவுகளில், இன்றும் நீங்காமல் மிதந்து கொண்டே இருப்பது, டைட்டானிக் கப்பல். அது விபத்துக்கு உள்ளாகி, 111 ஆண்டுகள் ஆன பிறகும், இப்போதும் பேசுபொருளாகவே இருக்கிறது.

இன்றுவரை அது, சர்வதேச ஆழ்கடல் ஆய்வாளர்களையும், கப்பல் ஆய்வாளர்களையும் டைட்டானிக் தன்மீதான பார்வையை அகற்ற அனுமதிக்கவே இல்லை.

கடந்த 2000மாவது ஆண்டு, கப்பல் மூலம், 28 நீர் மூழ்கி வீரர்களுடன் சென்று, 800 வகையான டைட்டானிக்கின் எஞ்சிய பொருட்களை மீட்டனர். அதில், வைர பிரேஸ்லெட், பாக்கெட் கடிகாரம், கப்பலின் வரைபடம் உள்ளிட்ட, ஏராளமான பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

இப்பொருட்கள், உலக நாடுகளின்

கவனத்தை ஈர்க்கும் வகையில், ஏலம் விடப்பட்டன. அப்போதைய சேகரிப்புகளில் ஒன்றான, டைட்டானிக் கப்பலின் முதல் வகுப்பு உணவகத்தின் மெனு, தற்போது ஏலத்துக்கு வருகிறது.

டைட்டானிக் கப்பலில் பயணித்த, கனடாவின் நோவா ஸ்கோடியாவைச் சேர்ந்த, லென் ஸ்டீபன்சன் என்பவர், 2017ல் இறந்தார். அவரது உடைமைகள் சோதிக்கப்பட்ட போது, அதில் டைட்டானிக் கப்பலின் முதல் வகுப்பு பயணிகளின், இரவு உணவு மெனு கிடைத்திருக்கிறது.

அந்த மெனுவில், அப்போதைய கோடீஸ்வரர்களான ஜே.ஜே.ஆஸ்டர், பெஞ்சமின் குகன்ஹெய்ம், சர் காஸ்மோ டப்-கார்டன், மோலி பிரௌன் உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்ட, ஆடம்பரமான உணவுகளான, சிப்பிகள், ஸ்குவாப் எ லா கோடார்ட், ஸ்பிரிங் லாம்ப், டூர்னெடோ ஆப் பீப் எ லா விக்டோரியா, மல்லார்டு டக், ஆப்ரிகாட்ஸ் போர்டலூ உள்ளிட்ட உணவுகள் குறிப்பிடப்பட்டு இருந்திருக்கின்றன.

இந்த இரவு உணவு மெனுவை, "ஹென்றி ஆல்ட்ரிட்ஜ் அண்ட் சன் லிமிடெட்" ஏல நிறுவனம் உறுதிப் படுத்தியிருக்கிறது. இந்த மெனு கார்டு, தற்பே-ாது ஏலத்துக்கு வருகிறது. பிரிட்டன் பவுண்டு மதிப்பில், 60 ஆயிரத்துக்கு இதன் விலையை நிர்ணயித்துள்ளனர். இது இந்திய மதிப்பில், சுமார் 61 லட்சமாகும்.

## வீட்டுத்தோட்டத்தில் விளையும் பழங்களால், கோடீஸ்வரனான இளைஞர்!



வீட்டுத்தோட்டத்தில் வெளிநாட்டுப் பழவகைகளை பயிரிட்டு, கோடிக்கணக்கில் ஆண்டு வருமானம் ஈட்டி வருகிறார், கேரளாவின் ஆலுவா பகுதியைச் சேர்ந்த, ஆ'ால்.

இவர், தனது வீட்டில், லாக்டவுன் காலத்தின் போது, வெளிநாட்டுப் பழங்களை, இயற்கை முறையில் பயிரிடத் தொடங்கி, இப்போது இந்த நிலைக்கு வளர்ந்துள்ளார்.

ஆலுவாவில் உள்ள ஒரு ஹெல்த்கேர் நிறுவனத்தில் தொழில்முறை நிபுணரான, 29 வயதான ஆ'ால் பிளச்சுக்கு, வெளிநாட்டுப் பழங்களைப் பயிரிடுவதில் மிகுந்த ஆர்வம். இந்த ஆர்வம், அவர் நினைத்ததை விட, அவருக்கு அதிக பலனைத் தந்துள்ளது.

சாதாரணமாக மார்க்கெட்டில் கிடைக்காத பழ ரகங்களை பயிரிட வேண்டும் என்ற ஆர்வத்தினால், களத்தில் இறங்கியவர், அப்படி ஆன்லைனில் அவர் கண்டுபிடித்த, முலாம்பழம் குடும்பத்தைச் சேர்ந்த, வியட்நாமிய பழமான, "கேக்" உடன் அவரது முயற்சியைத் தொடங்கி, உள்ள□ர் நர்சரியில் மரக்கன்றுகளை வாங்கி மொட்டை மாடியில் நட்டு, அவை நல்ல தரமான விளைச்சலைக் கொடுக்கவே, அதைத் தொடர்ந்து, அவர் தனது வீடு அமைந்துள்ள 5 சென்ட் நிலத்தில், பிரேசிலியன் பே'ன் ப்ரூட், மிராக்கிள் ப்ரூட், டிராகன் பழம் உட்பட, பல வகைகளை பயிரிடத் தொடங்கினார்.

கடந்த நான்கு ஆண்டுகளில், பலவிதமான கவர்ச்சியான பழங்களை, இயற்கை முறையில் பயிரிட்டுள்ளார். இந்தப் பழங்கள் விற்பனையில், அவர் மாதந்தோறும் பல லட்சக்கணக்-கான ரூபாயை சம்பாதிக்கிறார். ஓர் ஆண்டுக்கு, கோடிக்கணக்கில் லாபம் ஈட்டி வருகிறார்.

## ஏலத்தில் கோடிக்கணக்கில் விலை போன, மாவீரன் நெப்போலியலின் தொப்பி!



போர்க்களங்களில், இரண்டு பக்கங்கள் கூரான, "பைகோர்ன்ஸ்" வகையைச் சேர்ந்த தொப்பியை அணிந்தவாறு தான், நெப்போலியன் காட்சிப் படுத்தப்பட்டிருப்பார்.

நெப்போலியன் காலத்தில் பயன்படுத்திய தொப்பிகள், எப்போதுமே ஏலங்களில் கிடைக்கின்றன. ஆனால், அந்தத் தொப்பிகள், பெரும்பாலும் அரச குடும்பத்தில் தொடர்புடைய நபர்கள் பயன்படுத்தியதாகவும், போர் வீரர்கள் பயன்படுத்தியதாகவும் தான் இருக்கின்றன.

அண்மையில் ஏலம் விடப்பட்ட தொப்பி, அப்படியான தொப்பி அல்ல. அது, மாவீரன் நெப்போலியனின் மரபணுவைக் கொண்டிருக்கும் ஒரு தொப்பி. அந்தத் தொப்பி, கிட்டத்தட்ட 17.5 கோடி ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது.

பிரெஞ்சுப் பேரரசன் நெப்போலியன் போனபார்ட்,

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரான்ஸை ஆட்சி செய்து கொண்டு, ஐரோப்பாவில் பெரும் வெற்றிகளைப் பெற்ற காலத்தில், அவன் அணிந்திருந்த தொப்பி அது.

நெப்போலியன் அணிந்திருந்த உடைமைகள் சிலவற்றில், இதுவும் ஒன்று. கடந்த ஆண்டு இறந்துவிட்ட பிரான்ஸ் தொழிலதிபர் ஒருவரின் சேகரிப்பிலிருந்த, இந்தத் தொப்பி உள்ளிட்ட நெப்போலியன் தொடர்பான சில உரிய பொருள்கள், அண்மையில் பாரிஸில் ஏலம் விடப்பட்டன. அந்த ஏலத்தில் தான், நெப்போலியனின் தொப்பியும் இடம் பெற்றது.

தொடக்கத்தில், 6.5 லட்சம் டாலர் என மதிப்பிடப்பட்டு, தொடர்ந்து தொகை உயர்ந்துகொண்டே சென்று, முடிவில், 21 லட்சம் டாலருக்கு, "ஓஸுனா" ஏல மையத்தின் தலைவர், "ழான் பே ஓஸுனா" ஏலத்தில் எடுத்தார்.

பொதுவாக, இருமுனைத் தொப்பிகளின் இரு முனைகளும், முன்னும் பின்னும் இருக்குமாறு தான் மற்றவர்கள் அணிவார்கள். ஆனால், நெப்போலியன் மட்டும், தொப்பியின் இரு முனைகளும், தன் இரு தோள்களின் பக்கம் இருக்குமாறு அணிவாராம். இந்தப் பாணிக்கு, "போர்க்களப் பாணி" என்று பெயராம். அவ்வாறு அணிவதன் காரணம், சண்டைகளின்போது, களத்தில் தங்கள் தலைவர் எங்கே இருக்கிறார் என்பதை, படை வீரர்கள் எளிதில் அறிந்துகொள்ள முடியும் என்பதால் தானாம்.

## ஒரு நகர மக்களின் நிலத்தடி வீடு!



பதுங்குக் குழிகள், ரகசிய அறைகள், சுரங்கப் பாதைகள், நிலத்தடி அறைகள் பற்றி எல்லாம், வரலாற்று புத்தகங்களிலும், ராணுவ தளவாட செய்திகளிலும் அறிந்திருப்போம்.

போர் அல்லது ஆபத்து என்று வரும்போது, ராஜாக்கள் முதல் சாதாரண மக்கள் வரை, இந்த நிலத்தடி பாதைகளிலோ, அறைகளிலோ தங்குவார்கள். ஆனால், ஒரு தென்னாப்பிரிக்க நகரமே, இன்றும் நிலத்திற்குள் தான் இருக்கிறது.

வடக்கு ஆப்பிரிக்க நாடான துனிசியாவில், அரபு மொழி பேசும் பெர்பர் இன மக்கள் வாழும், சிறிய நகரம் ஒன்று உள்ளது. அதற்கு, "மட்மதா" என்று பெயர். தெற்கு துனிசியாவின், டிஜெபல் தஹார் பிராந்தியத்தின், வறண்ட பள்ளத்தாக்குகளில் அமைந்துள்ள நிலப்பரப்பில், இந்த நகரம் அமைந்துள்ளது.

பெர்பர் இன மக்கள், பெரும்பாலும் விவசாயம் சார்ந்த தொழில்களைச் செய்து வருகின்றனர். அவர்கள் அரேபியாவில் இருந்து, துனிசியா நாட்டிற்கு குடிபெயர்ந்த போது, மட்மதாவில் உள்ள வறண்ட நிலத்தில், வெப்பத்தில் வாழ முடியாத காரணத்தால், இங்குள்ள நிலத்தின் அடியில் மண்ணைத் தோண்டி மக்கள் வாழத் தொடங்கினர்.

எளிய கைக்கருவிகளுடன் தோண்டக்கூடிய அளவுக்கு மென்மையாக இருக்கும் மணற்கல்லில், முதலில் ஆழமான வட்டக் குழியைத் தோண்டி, வீடுகள் கட்டுகின்றனர். குகையின் விளிம்புகளைச் சுற்றி தோண்டப்பட்டு, நிலத்தடி அறைகளை உருவாக்கி, வீட்டின் அமைப்பை கொண்டு வருகின்றனர்.

இந்தத் தனித்துவமான, "ட்ரோக்ளோடைட்" கட்டுமானமானது, பகலில் வெப்பத்திலிருந்து தப்பிக்க உதவியுள்ளது . ஆனால், 1960களில் பெய்த கனமழை மற்றும் வெள்ளத்தில், நிலத்தடி குடியிருப்புகள் கொஞ்சம் சேதமடைந்துள்ளது. இருப்பினும், இன்றைய சூழலில் இந்த வீடுகள், அனைத்து நவீன வசதிகளுடன் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டில், ஒவ்வொரு கொல்லைப் புறமும் ஒரு முற்றத்துடன் இணைகிறது. நிலத்தடி வீட்டிற்கு இந்த முற்றம் மிக முக்கியமானது. ஏனெனில், அது தான் இந்த வீட்டிற்கு வெளியில் இருந்து காற்றைக் கொண்டுவருகிறது. குடும்ப உறுப்பினர்கள் வேலைகளைச் செய்வதற்கும், சமூக ரீதியாக இணைவதற்கும், இது ஒரு மைய இடமாக விளங்கிகிறது.

மட்மதா சுரங்க வீடுகளில் இருந்து, சுவரில் பதிக்கப்பட்ட, கால் வைக்க ஏதுவான, படி போன்ற அமைப்பைக் கொண்டு தாவி, நிலப்பரப்பை அடைகின்றனர். துனிசியா ஜனாதிபதி, "ஹபீப் போர்குய்பா", நாட்டை நவீனமயமாக்க முயன்ற போது, இந்த நகரமும், அங்குள்ள பெர்பர் மக்களும் பல புதிய வசதிகளைப் பெற்றனர்.

# அச்சாரம்

ACCHARAM

பன்முக மாத இதழ்
Tamil Monthly

வ.எண். ______

## பத்திரிகை சந்தாதாரர் படிவம்

Passport Size Photo

பெயர் ______ த.பெ. ______

நிரந்தர முகவரி ______

______

பாலினம் ______ தொழில் ______

ஆசிரியர் அவர்களுக்கு, நான் மேற்காணும் விலாசத்தில் வசித்து வருகிறேன். தங்களின் அச்சாரம் பத்திரிகைக்கு (ஆயுள்/ஆண்டு) // சந்தாதாரராக / நன்கொடையாளராக விரும்புகிறேன். கீழ்காணும் முகவரியில் எனக்கு பத்திரிகையை அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## சந்தா கட்டண விபரம்

| | | | ✔ |
|---|---|---|---|
| ஆயுள் சந்தா | - | ரூ.5,000/- | ☐ |
| பத்தாண்டு சந்தா | - | ரூ.2,500/- | ☐ |
| ஆண்டு சந்தா | - | ரூ.250/- | ☐ |
| நன்கொடை | - | ரூ. | ☐ |

**பத்திரிகை அனுப்ப வேண்டிய முகவரி**

திரு/திருமதி ______

______

______

______

தொலைபேசி எண் ______ கைப்பேசி ______ இ.மெயில் ______

நாள்:

இடம்:

சந்தாதாரர் கையொப்பம்

படிவம் மற்றும் சந்தா கட்டணத்தை ஆசிரியர், அச்சாரம், SF1 இரண்டாம் தளம் 5/18 அண்ணா காலனி விருகம்பாக்கம் சென்னை-600092 என்கிற முகவரிக்கு அனுப்பவும். டிடி அல்லது காசோலைகளை அச்சாரம் என்கிற பெயரில் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். சந்தாதாரர்களுக்கு பின்னர் பணப்பற்று ரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

**வங்கி கணக்கு விவரம்:**

ACCHARAM - Current Account

Acc.No: 6565766161

Indian Bank, Saligramam Branch

IFS Code: IDIB000S082

# உலக சினிமா

- சே மணிசேகரன்

Kirokazu Kore-da -Japanese Director.

நண்பர் அந்தோணிசாமி அவர்களின் பரிந்துரையின் பேரில் முதன்முதலில் இவருடைய Shop lifters படத்தைப் பார்த்தப் பிறகு இவருடைய மற்ற படங்களையும் பார்க்க ஆர்வப்பட்டு Like Father Like Son Nobody Knows&#39@ படங்களையும் பார்த்து முடித்தேன்.

முந்தைய இரண்டு படங்களைப் பற்றி எழுதியும் பேசியும் உள்ளேன். இப்போ மூன்றாவதாக No body Knows

இயக்குநர் KiroKaziro koreda என் எதிரில் வந்தால் அவருடைய எலும்புகள் நொறுங்கும் அளவிற்கு கட்டியணைத்து எனது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தியிருப்பேன்.

ஒரு படத்தில் வரும் அனைத்துக் காட்சிகளையுமே உணர்வுபூர்வமா நம் மனதை தொட வைப்பது என்பது சாதாரண காரியமல்ல.இதை இவர் மிகப் பிரமாதமாக செய்து முடித்து இருக்கிறார்.

Nobody Knows திரைப்படம் ஜப்பான் நாட்டின் தலைநகரான டோக்கியோவில் நடந்த ஒரு உண்மை சம்பவத்தை தழுவி எடுக்கப்பட்ட திரைப்படமாகும்.

இந்தப் படத்தை படத்தொகுப்பு செய்ததும், தயாரித்ததும் இவர்தான்.இவருடைய பெரும்பாலான படங்களுக்கு இவரே படத்தொகுப்பாளராகவும் பணியாற்றுகிறார்.

படத்தின் ஆரம்பக் காட்சி-மெட்ரோ ரயிலில் 11 வயது மதிக்கத்தக்க ஒரு பையனும், அதே வயதில் பள்ளிக் கூட மாணவியொருத்தியும் ஒரு பெரிய சூட்கேஸோடு மெட்ரோ ரயிலில் பயணம் செய்கிறார்கள். இருவரின் முகங்களிலும் சோகம் அப்பிக்கெடக்கு. Cut to



Flash back- ரயிலில் நாம் பார்த்த அந்தப் பையனுடன் அவனுடைய அம்மா வீட்டு உரிமையாளரிடம் வீடு வாடகைக்கு கேட்பதோடு காட்சி ஆரம்பமாகிறது.

இவன் பெயர் அகிரா.6-th std படிக்கிறான். நானும் இவனும் மட்டும்தான் குடியிருக்கப் போகிறோம். ரூநரழவலுளஎன்கிறாள் அம்மா. வீட்டு உரிமையாளரும் மகிழ்ச்சியோடு சம்மதிக்கிறார். வீட்டு முன்பு சாமான்கள் இறங்குகிறது.இரண்டு பெரிய பெட்டிகளை மட்டும் சிரித்துக்கொண்டே இருவரும் தூக்க மாட்டாமல் தூக்கி வருகிறார்கள். கூடத்தில்சூட்கே'ஸ்களை திறந்தால் குழந்தைகள் இரண்டும் சிரித்துக் கொண்டே வெளியே வருகின்றன. ஒரு ஆண் குழந்தைக்கு 5 வயது.பெண் குழந்தைக்கு 4 வயது. இரவு. ரயில்நிலையம்.10 வயதுப் பெண் காத்து இருக்கிறாள்.அகிரா வருகிறான். அவளை அழைத்துச் செல்கிறான்.

வீட்டைப் பற்றியெல்லாம் அவள் ஆர்வத்தோடு விசாரித்துக் கொண்டே வருகிறாள். வீட்டு உரிமையாளருக்கு தெரியாமல் அவளை வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான். சந்தோஷமாக வீட்டில் இரவு சாப்பாட்டை முடிக்கிறார்கள். இந்த நான்கு பிள்ளைகளும் ஒரே தகப்பானருக்கு பிறந்தவர்கள் அல்ல.நான்கு கணவன்மார்களுடனும் இப்பொழுது அவளுக்கு தொடர்பும் இல்லை. அகிராவும் மற்ற

பிள்ளைகளும் அவர்களுடைய தந்தையை பார்த்ததே கிடையாது.

புது வீட்டில் குடியேறியபிறகு இவர்களுடைய அம்மா அகிராவைத் தவிர நீங்கள்யாரும் வீட்டைவிட்டு வெளியேறக்கூடாது.உங்களுக்குத் தேவையானதை அவன் வாங்கிக் கொடுப்பான்ரூநரழவா என்கிறாள்.

காலையில் சென்றால் இரவு வெகு நேரம் கழித்துதான் வீட்டுக்கு வருவாள்.மாடியிலிருந்து அகிரா இதைப் பார்ப்பான். ஒரு நாள் அகிராவிடம் ரூநரழவாநான் வருவதற்கு சில மாதங்கள் ஆகும். அதுவரையில் இவர்களை பத்திரமா பாத்துக்கோ... ரூநரழவாஎன்று சொல்லி வெளியூர் கிளம்புகிறாள்.

ஏர் போர்ட்டில் தாயை வழியனுப்ப வந்த அகிரா என்னையை School-ல் சேர்க்க மாட்டிங்களா.. என்று கேட்டதற்கு இங்கே பாரு அகிரா படிச்சாத்தான் முன்னேற முடியும்னு நினைக்காதே... இங்கே படிக்காதவங்களே நிறைய பேர் சாதிச்சுயிருக்காங்க என்பதை மட்டும் நீ மனசுலே வச்சுக்கோ என்று சொல்கிறாள்.பின் அவனுடைய மனதை மாற்றி சாப்பிட வைக்கிறாள். அம்மா போவதையே இவன் ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு பலவித எண்ணங்களோடு நிற்கிறான்.

சொன்னபடியே அவளிடமிருந்து இரண்டு மூன்று மாதங்கள் பணம் வருகிறது.அதன்பிறகு, அவளிடமிருந்து பணம் வருவதும் நிற்கிறது. வாடகைகொடுக்காததால் Water supply Elecricity-யை நிறுத்தி விடுகிறான் வீட்டின்உரிமையாளர். பக்கத்தில் இருக்கும் பூங்காவுக்கு அழைத்துச் சென்று அவர்களை குளிக்க வைக்கிறான்.துணி துவைத்து கொடுக்கிறான். ஒரு நாள் அவர்களைசந்தோஷப் படுத்துவதற்காக அம்மா கிறிஸ்துமஸீக்காக Greetingsஅனுப்பியிருக்கிறாள் என்று பொய் சொல்லி எல்லோருக்கும் Greetings card-யை கொடுக்கிறான். குழந்தைகள் எல்லோரும் சந்தோஷப்படுகிறார்கள். அவளுடைய அலுவலகத்திற்கு போன் செய்கிறான். அவள் வேலையை ராஜினாமா செய்து ஒரு மாதம் ஆகிறது என்கிறார்கள். 12 வயது குழந்தை என்ன செய்வான் பாவம். வீட்டில் ஒருவேளை சாப்பிடுவதே பெரும் பாடாகிறது.பசியில் நான்கு வயது பெண் குழந்தை காகிதத்தை தின்னும் துயர நிலை. ஒரு Department store-க்கு சென்று வேலை கேட்கிறான். 16 வயதுக்கு குறைந்தவர்களை இங்கே வேலைக்கு வைத்துக் கொள்ள மாட்டார்கள் என்கிறான் அங்கு வேலை செய்யும் பையன். அவன்தான் இவர்கள் சாப்பிடுவதற்கு அவ்வப்போது ஏதாவது தருவான். பள்ளியில் படிக்கும் பெண்ணொருத்தியுடன் இவனுக்கு பழக்கம் உண்டாகிறது. அவன், இவனுடைய மோசமான நிலையைப் பார்த்து, பணத்துக்காக வயதான ஒருவனுடன் சென்று விட்டு வந்து இவனுக்கு பணத்தை கொடுக்க இவன் அந்த பணத்தை தட்டி விட்டு மனஉளைச்சலோடு ஓடுகிறான்ஆமூச்சு வாங்க ஓடிக்கொண்டேயிருக்கிறான்.

நாட்கள் செல்ல செல்ல நாளைய பொழுதுக்கு என்ன செய்வதன்ற நிலை அதிகமாகிறது.வீட்டில் இருக்கும் பிள்ளைகளுக்காக ஏதாவது செய்து பசியாற்ற முயற்சிக்கிறான். ஒரு கட்டத்தில் எதுவுமே செய்யமுடியாத நிலை. நான்குவயதுக் குழந்தை உடல்நிலை பலவீனமாகி கீழே விழுந்து இறந்து விடுகிறது.இவனுடைய வயதுக்கு மீறிய துயரங்களை சுமக்கி-றான். இவன் புறக்கணித்த அந்த பள்ளிக்கூட மாணவியின் வீட்டு வாசலில் உட்கார்ந்து அவளுக்காக காத்திருக்கிறான். புதிதாக வீட்டுக்கு குடிவரும் பொழுது உயிரோடு சூட்கே'ஷுக்குள் வந்தவளை, பிணமாக அதே சூட்கேஷ்'ுக்குள் வைத்து பள்ளிக்கூட மாணவி வாங்கிக் கொடுத்த குழந்தைக்கு பிடித்த சாக்லெட்டுகளையும் போட்டு மூடுகிறான். இறந்து போன அந்தக் குழந்தைக்கு விமானத்தை பார்க்க வேண்டும் என்பது ஆசை.

விமான தளத்தின் பக்கத்திலேயே குழந்தையை புதைக்கிறான்.விமானங்கள் மேலே

பறக்கிறது.அதைப் பார்க்கத்தான் அந்தக் குழந்தை இப்போ உயிரோடில்லை. நினைத்துப் பார்த்து கண்ணீர் வடிக்கிறான் பாசம் மிகுந்த அந்த அகிரா.இரவு முழுவதும் குழந்தையின் நினைவுகளோடு உட்கார்ந்து இருக்கிறான்.விடிகிறது. பள்ளி மாணவி, தங்கை,தம்பியோடு திட்டமிடப்படாத பயணத்தோடு நடந்து செல்கிறான் அகிரா. அவர்களுடைய அந்த பயணமாவது நல்ல திசையைக் காட்டட்டும் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

பல சர்வதேச விருதுகளை வாங்கிய திரைப்படமிது. படத்தின் சிறப்பு அம்சம்!

அகிரா கதாபாத்திரத்தில் நடித்த அந்த சிறுவனின் நடிப்பு. முத்திரைக் காட்சி!

எல்லோருமே பட்டினி கிடப்பார்கள். அந்த பசியிலும் 5 வயது சிறுவன் பால்கனியில் உள்ள செடிகளுக்கெல்லாம் தண்ணீர் ஊற்றிக் கொண்டியிருக்கும் காட்சியை நம்மால் மறக்கவே முடியாது.

சிறுவன் அகிரா கதாபாத்திரத்தில் நடித்த லூரலய லுயபசைய-வுக்கு கேன்ஸ் திரைப்பட விழாவில் சிறந்த நடிகருக்கான விருது கிடைத்துள்ளது.




## பாசப் பறவைகள்

அன்பெனும் தொட்டிலில்
ஆடிடும் பொன்னுஞ்சல்...
உறவென்னும் உணர்வில்
பாடிடும் கீதங்கள்...
யாரென்று அறியாமல் அலைமோதும் நெஞ்சில்...
ஆனந்த இராகம்
இசைத்திடும் உள்ளம்...
உனக்காக நானும்
எனக்காக நீயும்...
உயிரணுக்களின் ஓரங்க
நாடக ஒத்திகை...
இமைகள் மூடி
இதயம் சொல்லிடும்...
இன்பத்தில் கைக்குலுக்கி தொலைவில்
நின்றாலும்...

துன்பத்தில் தோள்
தாங்கி நிமிர்த்திடும்...

கோபமும் மாறிவிடும்
விட்டுக் கொடுப்பதில்...

கண்ணீர் கண்டிட
இதயம் வெடித்திடும்...

தொலைவில் இருந்தாலும்
தொடர்ந்திடும் பந்தம்...

தடைகள் வந்தாலும்
உயிர்த்தெழும் பீனீக்ஸாய்...

இளமை தொட்டு
முதுமை வரை...

இதயத்துடிப்பு
அடங்கும் நொடியும்...

,ணைந்தே வாழும்
பாசப் பறவைகள்...

- கவிஞர் கா.கலைச்செல்வி,
திருச்செங்கோடு.

# கவிதைக் கூடல்

**வேறென்ன வழி?**

ஏதாவது ஒரு நதியை
ஏதாவது ஒரு மலைத்தொடரை
மூலத்தில் இருந்து துவங்கி
கடந்து சேரவேண்டும் போல் தோன்றுகிறது
தொடர்ந்து வாராதவைகளைக் கண்டு
துயர்பெருகிக் கிடக்கிறது
நானும் அப்படி
துயர்பெருக்காமல் தீர்ந்துபோக
வேறென்ன வழியிங்கு இருக்கிறது?

- கோகுலா, தஞ்சை

**ஒரு புன்னகை!**

சிகப்பு பச்சையென
மட்காதவைகளையும் மட்குவதையும்
பிரித்துக்கொடுத்துவிட்டு
கூட்டிப்பெருக்கியதில் கொஞ்சத்தை
வீதியில் வீசியெறிந்தேன்
கோபப்பட்டார் தூய்மைப்பணியாளர்
அவைகள் இறகுகள்
கழிவுகள் அல்ல என்றேன்
மட்கும்தானே என்றாள்
தொட்டெடுத்துச் சேகரித்துச்சொல்
என்றேன்
ஒன்றிரண்டை
பத்திரப்படுத்திக்கொண்டு
ஒரு புன்னகையை
தானும் உதிர்த்துவிட்டுப்போனாள்.

- கவிதாசன், திண்டிவனம்

**பசி!**

ஒரு இளவயது கழுகைப்போல்
மேகங்களின் குளிர் உணர
உயர உயரப் பறக்க முயல்கிறேன்
கருமேகங்கள் கூடுகிறது
தூரத்தில் மின்னல்களும் வெட்டுகிறது
முதிர்ந்த இறகுகள் சுமையாக இருக்கிறது
களைந்து உதிர்க்கிறேன்
கொட்டித்தீர்க்கிறது பெருமழை
நிலத்தின் குளிர் தாங்க இயலவில்லை
பசி
கூர் அலகை பாறைகளைத் தேடித்தேடி
கொத்தி முறிக்கிறேன்
பறப்பதையும் விடவும் பசி மேலாகாது
எப்பருவத்தும் பறவைக்கு.

- ஆ.நந்தினி, செஞ்சி

**பொம்மை!**

நேற்றொரு பொம்மையைக் கண்டெடுத்ததை
சொல்லாம் என்றிருந்தேன்
சிறப்பானது என்றும் தோன்றியது
என்ன சிறப்பு என்ற கேள்வி எழுமே
அதற்கொரு தெய்வீகச்சாயல் இருக்கிறது என்று
சொல்லி முடிக்கலாம் எனவும் நினைத்திருந்தேன்
வால் ஆட்டாது, விழிகள் அசையாது
அதற்கொரு தெய்வீகச்சாயல் இருக்கிறது என
வார்த்தைகளைக் கூட
தேர்ந்தெடுத்து வைத்திருந்தேன்
நேற்றிரவே அது சுகவீனமாய்
இருப்பதாயும் தோன்றியது
சொற்கள் கூடியது, ஒத்தி வைத்தேன்
இன்று படுக்கையில்
அசைவது போல் இருந்தது
அந்தியில் அதன் விழிகளில் கொஞ்சம்
அசைவிருப்பது போலவும் தோன்றியது
பிணச்சாயல் இல்லை
இருக்கிறது அதுவும் என்று
எப்படிச்சொல்லாமல் இருப்பது?

- எஸ்.கண்ணன், தஞ்சாவூர்

**(தொகுப்பு: - பாப்பனப்பட்டு வ.முருகன்)**

Owned, Published and Printed by M.C.SEKAR Published from SF1, 2nd Floor, 5/10, Anna Colony, Virugambakkam, Chennai - 600 092. Printed at J.M.PROCESS at 22/49, Subedar hussain Street, Border thottam, Royapettah, Chennai - 600 014. Editor: M.C.SEKAR

குறைந்த விலையில்

ஸ்ரீ பச்சையம்மன் துணை...

அரங்கூர் ஏரோபிளேன்

# S.R.நகர்

(சுசீலா – இராமசாமி)

தொழுதூர் To திட்டக்குடி ரோடு, பெரங்கியம் கிராமம்

APPROVED RERA & DTCP APPROVED

அரசு அங்கீகாரம் பெற்ற மனைப்பிரிவு




| Plot No | Sq.ft | Cent |
|---|---|---|
| 1 | 1611.77 | 3.70 |
| 2 | 1247.50 | 2.86 |
| 3 | 1247.50 | 2.86 |
| 4 | 1247.50 | 2.86 |
| 5 | 1252.49 | 2.87 |
| 6 | 1444.74 | 3.31 |
| 7 | 1477.05 | 3.39 |
| 8 | 1421.15 | 3.26 |
| 9 | 1453.59 | 3.33 |
| 10 | 1497.00 | 3.43 |
| 11 | 1528.19 | 3.51 |
| 12 | 1553.14 | 3.56 |
| 13 | 1550.55 | 3.56 |
| 14 | 900.09 | 2.06 |
| 15 | 975.14 | 2.24 |
| 16 | 1040.40 | 2.39 |
| 17 | 1440.18 | 3.30 |
| 18 | 951.56 | 2.18 |
| 19 | 1011.40 | 2.32 |
| 20 | 1315.78 | 3.02 |
| 21 | 1325.30 | 3.04 |
| 22 | 1512.50 | 3.47 |
| 23 | 1516.96 | 3.48 |
| 24 | 1521.06 | 3.49 |
| 25 | 1729.00 | 3.97 |
| 26 | 1772.50 | 4.07 |
| 27 | 1796.25 | 4.12 |
| 28 | 1833.56 | 4.21 |
| 29 | 1869.50 | 4.29 |
| 30 | 1704.48 | 3.91 |
| 31 | 1611.50 | 3.70 |
| 32 | 1588.60 | 3.64 |
| 33 | 1593.80 | 3.66 |
| 34 | 1573.00 | 3.61 |
| 35 | 1560.00 | 3.58 |
| 36 | 1381.80 | 3.17 |
| 37 | 1442.24 | 3.31 |
| 38 | 1232.50 | 2.83 |
| 39 | 1237.50 | 2.84 |
| 40 | 1237.50 | 2.84 |
| 41 | 1235.00 | 2.83 |
| 42 | 1428.25 | 3.28 |
| TOTAL | 59869.49 | 137.32 |

தொடர்புக்கு : 7358310286 R.நவீன் ராமசாமி

ACCHARAM, Tamil monthly, July 2025
Date of publication 1st Every Month
Poster at Pathrika channel Egmore
RNI No.TNTAM/2016/69258 R.Dis.No.610/2016
Postal Reg.No.TN/CC(S)DN/559/23-25
Posted between 1-7 July 2025

